இந்தியாவில் கைதானவர்கள் இலங்கை திரும்புவதில் கஷ்டம்

Rgistered as a News paper in Ceylon வில் சதம் 15

ஈழநாடு சந்தா

வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற்பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்: 389

National Tamil Daily

மலர் 11
இதழ்:120
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா

தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

யாழ்ப்பாணம் வைகாசி 29 ரபி:அவ் 25 புதன்கிழமை [11-6-69]

தூதரகத்தின் அமைந்த போக்கே காரணமாம்

சென்னை, ஜூன் 10

இவ்வருடம் மார்ச் மாதம் நடைபெற்ற கச்சதீவு திருவிழாவின்போது இராமேஸ்வரம் கரையில் வைத்து கைதுசெய்யப்பட்ட இலங்கையர்களான 14 பேரும் இன்னும் இராமேஸ்வரத்திலேயே இருந்துவருகிறார்கள். இலங்கை ஹைகமிஷனின் அசமந்தப் போக்கினாலேயே அவர்கள் இன்னும் இங்கு இருக்க நேர்ந்துள்ளதாகத் தெரிகிறது.

கச்சதீவுத் திருநாளின்போது இராமேஸ்வரம் கரைக்கு வந்து சேர்ந்த இவர்களை இந்தியபொலிசார் கைதுசெய்து இராமநாதபுரம் கோர்ட்டில் ஆஜர் செய்தனர்.

கச்சதீவு திருநாளில் கலந்துகொள்ள வந்த இந்த 14 பேரும் வீடு திரும்பும்போது திசை தெரியாமல் வள்ளம் மாறி எல்லைதாண்டிவிட்டதாகவும் அதனாலேயே இந்திய கரைக்கு வரநேர்ந்ததென்றும் இவர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டதாகத் தெரிகின்றது. கோர்ட்டார் இவர்களை தலா 20 ரூபாய் அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார். அதன் பின் இந்த பதின்நால்வரும், பேரும் இலங்கைதிரும்பும் ஆர்வத்தோடு இராமேஸ்வரத்தில் இருந்து வருகிறார்கள். இராமேஸ்வரத்தைவிட்டு இவர்கள் வேறு எங்கும் போவதற்கும் அனுமதிக்கப்படவில்லையென்று தெரிகின்றது. இவர்கள் இலங்கை திரும்புவதற்கு இலங்கை அரசாங்கம் எதுவித நடவடிக்கையும் எடுக்காமலிருப்பதினாலேயே இன்னும் இந்தியாவில் இருக்கவேண்டியேற்பட்டிருப்பதாக அறியப்படுகிறார்கள்.

அண்மையில் இலங்கை மட்டக்களப்பு எம். பி. திரு. இராஜதுரை, நல்லூர் எம். பி. டாக்டர் நாகநாதன் ஆகியவர்கள் இவர்களை இராமேஸ்வரத்தில் போய் பார்த்ததாகதெரிகின்றது.

இந்தியாவில் கைதாகி இன்னும் அங்கிருந்து வருகிறவர்களின் பெயர் விபரம் வருமாறு: நாகரெத்தினம்' சொர்ணம்பிகை, முகம்மது நவாஸ் பவுண்ராஜி, இராசையா, கோபாலபிள்ளை, மகாலிங்கம், சண்முகராசா, திரிலோகநாதன், இராமேஸ்வரன், சண்முகம், குருசாமி, சிவலிங்கம், அழகர்சாமி.

இன்று சந்தேகநபர்கள் கோர்ட்டில் ஆஜர்

சுன்னகம் மயான 'மர்மம்' துலங்குகிறது

சண்முகதாசன் மீதான ரூ.1 லட்சம்மானநஷ்ட வழக்கு விசாரணை ஆரம்பம்

கொழும்பு, திங்கள்

கொழும்பு அப்போதிக்கரி ஸ்தாபன நிர்வாக அதிபர் திரு. எறிக் லபிரேயர் இலங்கைத் தொழிலாளர் சம்மேளனக் காரியதரிசி திரு. என். சண்முகதாசனிடம் ஒருலட்சம்ரூபாய் மானநஷ்டஈடு கோரி தொடர்ந்த வழக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

லபிரேயர்க்கு மானபங்கம் ஏற்படக்கூடிய விதத்தில் தாம் நடக்கவில்லையென திரு. சண்முகதாசன் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

17-2-68-ல் வெளியான ஆங்கிலமாலத் தினசரி ஒன்றில் வெளியிடப்பட்ட செய்தியில், திரு. சண்முகதாசன் தமக்கு மானபங்கம் ஏற்படக்கூடிய விதத்தில் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறாரென குற்றஞ் சாட்டியுள்ளார்.

குறிப்பிட்ட மாலைத் தினசரி நிருபருக்கு தாம் கொடுத்தசெய்தி முழுக்க முழுக்க உண்மைதான் என்றும், பொதுமக்களின் நன்மையை விரும்பியே அதனைத் தாம் கொடுத்ததென்றும், அதனால் மானபங்கம் ஏற்படக்கூடிய விதத்தில் நடக்கவில்லையென்றும் திரு. சண்முகதாசன் பின்னர் விளக்கினார்.

கொழும்பு அப்போதிக்கரி ஸ்தாபன ஊழியர்கள்வேலை நிறுத்தம் சம்பந்தப்பட்ட செய்திதான் இது.

திரு. சண்முகதாசன் சார்பில் வழக்கறிஞர்கள் திரு. என். சத்தியேந்திரா, கே. வைகுந்தவாசன் ஆகியோர் ஆஜராகினர்கள். திரு. லபிரேய் சார்பில் வழக்கறிஞர் விஜயதுங்கா ஆஜராகினர்.

'நெடுந்தீவில் ராணுவ முகாம் நிறுவப்படமாட்டாது"

தமிரசுத் தலைவர்கடம் பிரதமர் உறுதி

யாழ்ப்பாணம், புதன்

நெடுந்தீவில் ராணுவ முகாம் நிறுவுவதில்லையென தம்மைச் சந்தித்த தமிழரசுக்கட்சித் தலைவர்களிடம் பிரதமர் திரு. டட்லிசேனநாயக்கா உறுதி தெரிவித்தார்.

தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம், கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் ஆகியோர் பிரதமரைச் சந்தித்து நெடுந்தீவில் ராணுவ முகாம் நிறுவுவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தினர்கள். பிரதமரின் நிரந்தரக் காரியதரிசி திரு. ஜி. டி. பி. சமரசிங்காவையும் இவர்கள் சந்தித்துப் பேசினர்கள். நெடுந்தீவு மக்களின் எதிர்ப்பையும் பிரதமரிடமும், நிரந்தரக்காரியதரிசியிடமும் சமர்ப்பித்தனர்.

நெடுந்தீவு விவசாயிகளுக்கு

யாழ்ப்பாணம், புதன்

சுன்னகம் மயான வாலிபர் மரணம் சம்பந்தமாக சந்தேகத்தின்பேரில் தங்கராசா, கிருஷ்ணன் ஆகிய இருவரையும் சுன்னகப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். சந்தேகநபர் இருவரும், இன்றுகாலை மல்லாகம் மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர்செய்யப்படுவார்கள்.

சுன்னகம் பொலிஸ்இன்ஸ்பெக்டர் ஜேக்கப் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி, வவனியா, மன்னர் பகுதியில் 3 நாட்கள் தேடுதல் நடத்தியபின் திரும்பிவரும் போது கிளிநொச்சிக்கும் மாங்குளத்துக்குமிடையில் இவர்களை கைதுசெய்தது.

மயானத்தில் மரணமான லாலிபர் மண்டைதீவைச் சேர்ந்த ஸ்ரீகாந்தன் என்றலைக்கப்படும் ஸ்ரீகந்தராசா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'கூட்டுறவு இயக்கம்

ஏழைகளுக்குவாழ்வளிக்கும் பணியைப் புரிகிறது'

— பட்டிருப்பு எம். பி:

மட்டக்களப்பு, செவ்.

கூட்டுறவின் அவசியம் இலங்கைக்கு அத்தியாவசியமானது அரசியல், இன, மத, மொழி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட இந்த இயக்கம் நாட்டுமக்களின் பொருளாதார நலனைப்பாதுகாத்து ஏழைமக்களுக்கு வாழ்வளிக்கும் பணியைப் புரிகிறது.''

மேற்கண்டவாறு தமிழரசுக்கட்சித் தலைவரும் பட்டிருப்பு எம்.பி:யுமான திரு. எஸ். எம், இராசமாணிக்கம் அகில இலங்கைக் கூட்டுறவு ஆய்வாளர் கழகத்தின் 3-வது வருடாந்த மகாநாட்டில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் கூறினர். மட்டக்களப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கச் சமாஜ மண்டபத்தில் கழகத் தலைவர் திரு. ஆர். ஜேசுதாசன் தலைமையில் இந்த மாநாடு நடைபெற்றது.

தலைவர் தமதுரையில் தமிழ்க் கூட்டுறவு பரிசோதகர்களுக்குகெனத் தனியான சங்கம்நிறுவுவதன் அவசியம் பற்றி வலியுறுத்தினர்.

பொதுக் காரியதரிசி திரு. மி. ஜெயராசசிங்கம் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மட்டக்களப்பு கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. டபிள்யூ டீ. ஏப்பிரஹாம் பேசும்பொழுது, கூட்டுறவுப் பரிசோதகர்கள் பொதுமக்களுடன் நெருங்கிப் பழகவேண்டும் என்றும் மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டால் கூட்டுறவு என்பதன் அர்த்தமே இல்லாமற் போய்விடும் என்றும் கூறினர்.

இம்மகாநாட்டில் 58 புதிய கூட்டுறவு பரிசோதகர்கள் கழக உறுப்பினர்களாக உறுதிப்படுத்தப் பட்டனர். புதிய நிர்வாகிகள் விபரம் வருமாறு;-

தலைவர் திரு. ஆர். ஜேசுதாசன், காரியதரிசி திரு. மு. ஜெயராசசிங்கம், தனுதிகாரி திரு. ஆர். சிதம்பரநாதன் ஒன்பது பேரடங்கிய நிர்வாகசபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

(உடுப்பி நிரு)

'டாக்டர்கள் என்ஜினியர்களை உருவாக்கலாம்'

அடம்பன் செவ்வாய்

"அடம்பன் காவித்தியாபத்தில் விஞ்ஞான ஆய்வுகூடம் அமைப்பதால், பல டாக்டர்களையும், என்ஜினியர்களையும் உருவாக்க முடியும் கலைவிழா நிதியுடன் அரசாங்க உதவியையும் பெற்று பூரணதரத்துடன் ஆய்வுகூடத்தை அமைக்க முயற்சிக்கவேண்டும்''

இவ்வா அடம்பன் மகாவித்தியாலய விஞ்ஞான ஆய்வுகூடக் கட்டிட நிதிக்கான கலைவிழா இறுதிநாள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிப் பேசிய மன்னர் அரசாங்க அதிபர் திரு. ச. கதிர்காமநாதன் கூறினர்.

கரப்பந்தாட்டத்தில்வெற்றியீட்டிய தாராக்குண்டு ஜின்னு கோஷ்டியினருக்கு மாந்தைக் காரியாதிகாரி திரு. எம். சுப்பிரமணியம் பரிசில்வழங்கினர். 21 நாட்கள் நடைபெற்ற இவ்விழாவில் நாடகப்போட்டிகள், கும்மி, வில்லுப்பாட்டு, நடனங்கள் கதாப்பிரசங்கம் முதலியன இடம் பெற்றன.

பெற்றூர் ஆசிரியர் சங்கக் காரியதரிசி திரு. அ. ஆறுமுகம் நன்றியுரை கூறும்போது, கலைவிழாவால் ரூபா 15,000 இதுவரை சேர்ந்துள்ளதாகவும்மேலும் பல உதவிகள் கிடைக்க விருப்பதாகவும் கூறினர்.

நயினைதீவு அம்பாள் உற்சவம்

யாத்திரை ஏற்பாடு பூர்த்தி:

தார்.

17-2-68-ல் வெளியான ஆங்கிலமாலைத் தினசரி ஒன்றில் வெளியிடப்பட்ட செய்தியில், திரு. சண்முகதாசன் தமக்கு மானபங்கம் ஏற்படக்கூடிய விதத்தில் கருத்துக்களைத் தெரிவித்திருக்கி

பில் வழக்கறிஞர்கள் திரு. என். சத்தியேந்திரா, கே. வைகுந்தவாசன் ஆகியோர் ஆஜரானார்கள். திரு. லபி

றோய் சார்பில் வழக்கறிஞர் விஜயதுங்கா ஆஜரானார்.

நாயகம், வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம், கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ.

மும், நிரந்தரக்காரியதரிசியிடமும் சமர்ப்பித்தனர்.

துக்குமிடையில் இவர்களை கைதுசெய்தது.

மயானத்தில் மரணமான வாலிபர் மண்டைதீவைச் சேர்ந்த ஸ்ரீகாந்தன் என்றளைக்கப்படும் ஸ்ரீகந்தராசா என்று அடையாளம் கண்டு பிடிக்கப்பட்டதை தொடர்ந்து பொலிசார் விசாரணை தொடர்ந்து நடத்தி வருகிறார்கள்.

கர்களுக்குகெனத் தனியான சங்கம்நிறுவுவதன் அவசியம்

செய்யப்பட்டது.

(உடுப்பி நிரு)

முகம் நன்றியுரை கூறும் போது, கலைவிழாவால் ரூபா 15,000 இதுவரை சேர்ந்துள்ளதாகவும்மேலும் பல உதவிகள் கிடைக்க விருப்பதாகவும் கூறினார்.

— —

— —

பஸ்தரிப்பு நிலையம்

கோப்பாய், செவ்.

புத்தூர்- மட்டுவில் தெருவில் அந்திரான் ஏற்றத்துக்கும் விரவாணிச் சந்திக்கும் இடைப்பட்ட ஒரு மைல் தூரத்திற்கு பஸ்தரிப்பு நிலையம் இல்லாதிருப்பதால் இப்பகுதி விவசாய மக்கள் பெரிதும் கஷ்டத்துக்குள்ளாகின்றனர். இவ் விடைத்தூரத்தில் ஒரு பஸ்தரிப்பு நிலையம் அவசியம் நிறுவித் தருமாறு புத்தூர் ஸ்ரீகுமரகுருபரன் சனசமூக நிலையத்தினர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும். புத்தூர் கிராம சபைத் தலைவரையும் கேட்டுள்ளனர்.

விண்வெளி வீரர்கள்

சந்திரனில் நடப்பதை பூமியில் பார்க்கலாம்

நிலவில் இறங்கியதும் விருந்து சாப்பிடுவார்கள்

வாஷிங்டன், ஜூன் 9

ஜூலை மாதம் இருபதாம்திகதி சந்திரனுக்குச் செல்லும் வான வெளிவீரர்கள் இருவரும் சந்திரத் தரையில் இறங்கியதும் உருசியான விருந்து சாப்பிடுவார்கள். பூமியிலிருந்தே அவர்கள் இந்த விருந்துச் சாப்பாட்டைச் தம்முடன் கொண்டு போவார்கள். சந்திரனில் இறங்கும் கலத்துக்குள்ளிருந்தபடியே இந்த விருந்தை அவர்கள் சாப்பிட்டு விட்டு 4 மணிநேரம்நித்திரைசெய்துஓய்வு எடுத்துக்கொள்வார்கள். நித்திரையின்பின் மீண்டும் சாப்பிடுவார்கள். சந்திரனில் இறங்கி நடக்கும்போது பதட்டமில்லாமலும் எந்தநிலைமையையும் உடம்பு தாங்கிக் கொள்வதற்காகவே இவர்களுக்கு விசேஷ உணவும்ஓய்வும் கொடுக்கப்படுகின்றது.

சந்திரனை நோக்கி ஜூலைமாதம் செலுத்தப்படும் ராக்கட்டில்மூன்று பேர்கள் போவார்கள் ஆம்ஸ்டிரால். (38) ஆல்பிரின் (39) காலின்ஸ் (36) ஆகிய அம்மூவரும் சந்திரனை அண்மியதும் ராக்கெட் இரண்டாகப் பிரித்துக் கொண்டு ஒருவர் சந்திரனைச்சுற்றிக்கொண்டிருக்க ஆம்ஸ்டிராங் அல்டிரின் ஆகிய இருவரும் சிலந்தி வடிவிலான ஒரு ராக்கெட்டில் சந்திரனில் இறங்குவார்கள். 21-ந் திகதி காலை ஒன்பதரை மணிவாக்கில் ஆம்ஸ்டிரால் சந்திரனில் இறங்கி கால்வைப்பார். இதற்கு 27 நிமிடங்கள் கழித்து ஆல்டிரினும் இறங்குவார். பின்னர் இருவரும் சுமார் 150 அடி தூரம் நடப்பார்கள். இவர்கள் நடப்பதை ராக்கெட்டிலுள்ள கமிரா படம் எடுத்து பூமிக்கு அனுப்பும். இதனைப் பூமியிலுள்ளவர்கள் டெலிவிஷனில் பார்க்கலாம் சந்திரனில் நடக்கும் போது அங்குகிடைக்கும் கல், மண் முதலியவற்றை ஒருபையில் சேகரித்துக்கொண்டு திரும்புவார்கள். அனேகமாக 3மணிநேரம்அவர்கள் சந்திரனில் நடப்பார்கள். அவர்கள் அணிந்துள்ள உடை மிகவும் கனமானது. அதனால் ஒருவர் தடுக்கி விழுந்தால் மற்றவர் தான் தூக்கிவிடவேண்டும். அதனால் இருவரும் ஒருவரையொருவர் பிரிந்துசெல்லாமல் அருகருகிலேயே இருப்பார்கள். நடந்தபின் ராக்கெட்டுக்குத் திரும்பி மீண்டும் படுத்து நித்திரைகொண்டுவிட்டு மீண்டும் ராக்கெட்டை இயக்கி சுற்றிககொண்டிருக்கும் பிரதம ராக்கட்டுடன்இணைந்து மூவரும் பூமிக்குத் திரும்புவரர்கள்.

தி. மு. க. வின் பலம் ஒரு கற்பனை

-பிரதமர்

கொழும்பு, ஞாயிறு

'இ. தி. மு. க.வை பலம் வாய்ந்த ஒரு இயக்கமாக கற்பனை செய்து அதைத் தடை செய்யக் கோருவதும் பயம் கொள்வதும் அர்த்த மற்றது' இவ்வாறு இன்று கூடிய ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிமன்றக் குழுக் கூட்டத்தில பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா கூறினார்.

தொடர்ந்து பேசிய பிரதமர் ஆட்சிமன்றத்தின் இந்தக் கூட்டத் தொடர் 12-ம் திகதி முடிவடைவதாக தெரிவித்தார்.

நெடுந்தீவு விவசாயிகளுக்கு புதிய கொள்வனவு நிலையம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவு சமாஜத்தினர் நெடுந்தீவில் கொள்வனவு நிலையம் ஒன்றை நிறுவியுள்ளனர். இதனை மேற்படி சமாஜத் தலைவரான திரு. என். ரி. சிவஞானம் திறந்துவைத்தார்.

நெடுந்தீவில் உற்பத்தி செய்யப்படும் மிளகாய், வெங்காயம் போன்றவற்றை அங்குள்ள மக்கள் விற்பனைசெய்ய போக்குவரத்துவசதியின்மையால் அங்குள்ள மக்கள் கஷ்டமடைவதாகத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இது திறந்துவைக்கப்பட்டது.

இதேபோன்று இன்னும் சில கொள்வனவு நிலையங்கள் போக்குவரத்து சீர்கேடாகவிருக்கும் மற்றைய தீவுப்பகுதிகளிலும் திறக்கப்படவிருப்பதாக இச்சமாஜத்தின் முக்கிய பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

(கா. நி.)

'ஈழநாடு' இலக்கியப் போட்டி முடிவுகள்

'ஈழநாடு' பத்தாவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி 'ஈழநாடு' நடாத்திய மாபெரும் இலக்கியப்போட்டி முடிவுகள் நாளை 12-6-69 வியாழக்கிழமை வெளி வரும். 'ஈழநாடு' 10-வது ஆண்டு நிறைவு விழா அனுபந்தத்தில் வெளியாகும்.

நயினாதீவு அம்பாள் உற்சவம்

யாத்திரை ஏற்பாடு பூர்த்தி; மீன்பிடிவள்ள சேவைஇல்லை

யாழ்ப்பாணம், புதன்

இம்மாதம் 15-ந் திகதி ஆரம்பமாகவிருக்கும் நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய உற்சவத்துக்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாகிவிட்டன. இம்முறை மீன்பிடிப்படகுகள் சேவையில் ஈடுபடமாட்டாதென்றும், பிரயாணிகளை ஏற்றுவதற்கு அனுமதிப்பத்திரம் பெற்ற படகுகள் மட்டுமே சேவைக்கு அனுமதிக்கப்படுமென்றும் தீவுப்பகுதி காரியாதிகாரி திரு. விநாயகலிங்கம் அறிவித்துள்ளார்.

'சுகாதாரப் பகுதியினரும், பொலிஸ் பகுதியினரும் தாம் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். தற்காலிக பொலிஸ்நிலையம், சுகாதாரக் கந்தோர் யாவும் அமைக்கப்படுகின்றன இ. போ. ச. பஸ் சேவை வழமைபோல் நடைபெறும். தரைப்பிரயாணங்கள் கஷ்டமில்லாதவாறு நடைபெற ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த வருட திருவிழாவில் நடைபெற்ற படகு விபத்துப் போன்று இவ் வருடமும் நிகழாதவாறு பாதுகாக்க ஏற்ற நட

(4-ம் பக்கம் பார்க்க)

'இனக்கலவரம்தூண்டுவோர் மீது கவனம் செலுத்துகிறார்'

வென்னப்புவ, செவ்.

'நாட்டில் இன வேற்றுமையை உண்டுபண்ணுவவற்குச் சில தீவிரவாதிகள் முயலுகிறார்கள் என்ற ஒரு செய்தி அரசாங்கத்துக்குக் கிடைத்துள்ளது என்றும் தீவிரவாதிகளினால் உருவாக்கப்படும் ஆக்கட்டான நிலைகளைச் சமாளித்து நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட பிரதமர் உறுதிபூண்டுள்ளார் என்றும் வென்னப்புவவில் இருபாடசாலைகளில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், இன, மத, மொழித் துவேஷங்களைக் கிளறிவிட்டு அரசியல் அதிகாரத்தைப் பெறவிரும்பும் தீவிரவாதிகள், சாதாரண மக்கள் அனுபவிக்கும் கஷ்டகளை உணர்வதில்லை. தீவிரவாதிகளின் இத்தகைய செயல் நாட்டின் ஒற்றுமைக்கும் அதேவேளையில் நாட்டின் பொருளாதாரத்துக்கும் அழிவைக்கொண்டுவரும்' எனக் கூறினார்.

66-வது கூட்டம்

பம்பலப்பிட்டி, செவ்.

கொழும்பு விவேகானந்த சபையினரின் 66-வது வருடாந்த கூட்டம் இம்மாதம் 22-ம் திகதி சபை மண்டபத்தில் நடைபெறும். புது வருட உத்தியோகத்தர், முகாமைச்சபை உறுப்பினர் தெரிவும் நடைபெறும்.

'ஈழநாடு' பத்தாவது ஆண்டு நிறைவு விழா

இன்றிரவு கழிந்தால் நாளை 'ஈழநாடு' விழா; 27 வீரர் கலந்துகொள்ளும் 26 மைல் மரதன்

போட்டிப்பாதை இதுதான்! நாளை வைத்திய சோதனை!!

— நமது காரியாலய நிருபர் ''திரு'' —

யாழ்ப்பாணம், புதன்

இன்றிரவு கழிந்து நாளை விடிந்தால் 'ஈழநாடு' பெரு விழா. மூன்று தினங்களும் யாழ். நகர் எங்கும் 'ஈழநாடு' பத்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெறும் பல்வேறு போட்டிகளையும் கண்டுகளிக்கும் ஆர்வம் மக்களிடையே அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

பாடசாலை மாணவர்கள், விளையாட்டு வீரர்கள், அரசாங்க அலுவலகங்கள், தொழிற்சாலைகள், வீதிகள் எங்குமே 'ஈழநாடு' பெரு விழா பற்றிய பேச்சாகவிருக்கின்றது.

நாளைய விழா நிகழ்ச்சியாக உடற்பயிற்சிப்போட்டி வலைப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், கரப் பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், பேச்சுப்போட்டி ஆகியவற்றின் அரை இறுதிப்போட்டிகளும் நடைபெறும்.

13ம் திகதி நிகழ்ச்சியாக கரப் பந்தாட்ட 'ஓவர் கேமின்' இறுதிப் போட்டிகளும், 'செற்அப் கேமின்' அரை இறுதிப் போட்டியும் நடைபெறும்.

14ம் திகதி, விழாவின் காலை முதல் நிகழ்ச்சியாக அதிகாலை 5-30 மணிக்கு 26 மைல் மரதன் ஓட்டப் போட்டி ஆரம்பமாகும். 'ஈழநாடு' காரியாலயத்திலிருந்து ஆரம்பமாகும் இப்போட்டி ஈழநாடு காரியாலயத்திலிருந்து ஸ்டான்லிவீதி வழியாகச் சென்று நாகவிகாரையை அடைந்து, அங்கிருந்து இடப்பக்கமாகத் திரும்பி, பலாலிவீதி வழியாகப் பலாலிச்சந்தியை அடைந்து அங்கிருந்து இடப்பக்கமாகத் திரும்பி காங்கேசன்துறை வெளிச்சவீட்டுச் சந்தியை அடைந்து, அங்கிருந்து நேரே யாழ்ப்பாணம் நோக்கி வந்து ஸ்ரேடியம் மைதானத்தை அடையும்.

26 மைல் மரதன் ஓட்டப் போட்டியிலும் மொத்தம் 27 பேர் கலந்துகொள்கின்றார்கள். கலந்துகொள்வோர் பற்றிய விபரம்:

1. பி. எஸ். ஆறுமுகம் கோப்பாய், 2. ஆர். ஸ்ரீஸ் கந்தராஜா வல்வெட்டித்துறை, 3. எஸ். சுப்பிரமணியம் அளவெட்டி, 4. ஆர். இராஜமனோ திருநெல்வேலி, 5. கே. சித்தார்த்தன் திருநெல்வேலி, 6. கே. சிதறஞ்சன் திருநெல்வேலி, 7. எஸ். ஆனந்த ராஜா திருநெல்வேலி, 8. வி. சபாநாதன் திருநெல்வேலி, 9. எஸ். லோகநாதன் திருநெல்வேலி, 10. எஸ். தயன்றஞ்சன் மானிப்பாய், 11. ஏ. விநாயகமூர்த்தி அச்சுவேலி, 12. கே. பொன்னம்பலம் யாழ்ப்பாணம், 13. எல். கனகசபாபதி கோப்பாய், 14. எம். சண்முகநாதன் யாழ்ப்பாணம், 15. டபிள்யூ. பி. பி. மொன்ட்பட்டன் யாழ்ப்பாணம், 16. எஸ். சகுந்தலநாதன் தொண்டமானாறு, 17. ஆர். எஸ். இலகுநாதன் இணுவில், 18. ஏ. டி. ஜனஸயா யாழ்ப்பாணம், 19. என். இலங்கைநாதன் சுன்னாகம், 20. ஐ பரமேஸ்வரன் சாவகச்சேரி, 21. எஸ். ஜீவரத்தினம் யாழ்ப்பாணம், 22. பி. கனககுலசிங்கம் பண்டத்தரிப்பு, 23. கே. இராஜேந்திரம் பண்டத்தரிப்பு, 24. ஆர். திருநாவுக்கரசு, பண்டத்தரிப்பு, 25. எஸ். சாம்பசிவமூர்த்தி தெல்லிப்பளை 26. கே. எஸ்' வேலுப்பிள்ளை செம்பியன்பற்று 27. எஸ். சுப்பிரமணியம் அளவெட்டி.

மரதன் ஓட்டத்தில் முதலாவதாக வரும் வீரருக்கு நொர்தன் இன்டஸ்றிஸ் ஸ்தாபனத்தார் வழங்கும் வெற்றிக்கிண்ணம் பரிசாக வழங்கப்படும் 26 மைலையும் ஓடி முடிக்கும் ஒவ்வொருவருக்கும் நற்சான்றிதழ்கள் வழங்கப்படும்.

போட்டியில் கலந்துகொள்ளும் 27 வீரர்களும் வைத்தியப் பரிசோதனைக்காக நாளை 12-ம் திகதி நண்பகல் 2 மணிக்கு ஈழநாடு காரியாலயத்துக்கு சமுகம் தருமாறு வேண்டப்படுகின்றனர்.

போட்டியில்கலந்துகொள்பவர்களுக்கு வசாவிளான் காங்கேசன்துறை, சுன்னாகம் கொக்குவில் சந்திகளில் சிற்றுண்டிகள் வழங்கப்படும்

நாளைய ஈழநாடுடன்விழா அனுபந்தம் ஒன்றும் வெளிவருகின்றது.

நாளை கடைசி நாள்

14 ம் திகதி காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் அலங்கார வண்டிகளின் விநோதஉடைப் போட்டியாளர்களின் விண்ணப்பங்கள் நாளை நண்பகல் 12 மணிவரைஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பப் பத்திரம் எதுவும் இல்லை.

புங்குடுதீவு, செவ்வாய்

புங்குடுதீவுக்கு குடிதண்ணீர் வழங்குவதற்கான ஏற்பாடுகளைசமூக சேவைப் பகுதி செய்துவருகிறது. இதன் முன்னோடியாக தீவுப் பகுதி காரியாதிகாரியின் அறிக்கை கோரப்பட்டுள்ளது இதுசம்பந்தமாக புங்குடுதீவு கல்வி வளர்ச்சிக் சுழகம் தொடர்பு கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

காணி

பிரதான வீதி கண்டி ரோட்டுக்கு அண்மையிலுள்ள 2 பரப்பும் 2 குழியுமுள்ள குடியிருப்புக்காணிவிற்பனைக் குண்டு. எந்த நேரமும் பஸ் போக்குவரத்துக்கு வசதி உள்ள இடம். விபரங்களுக்கு: சி. துரைசிங்கம், 58, நெடுங்குளம் ரோட், அரியாலை, யாழ்ப்பாணம். 1195

சொந்தப் பாவிப்பிலுள்ள E. Y. 4000 தொடர் இலக்கத்தையுடைய மோறிஸ் மயினர் கார் விற்பனைக் குண்டு நேரில் பார்வையிடலாம். விலாசம்: 31, அம்மன் வீதி, நல்லூர். 1199

தட்டச்சு/ பிரதிகள் எடுக்கும் எல்லா வேலைகளும் ஏற்றுக்கொள்ளப்படும். நியாயமான கட்டணம். துரிதமான சேவை. ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி. 1200

ராஜா 149வது தினம் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்களுக்கு அரைக்கட்டணம்

வல்வெட்டித்துறை
ரஞ்சனா தியேட்டர்
சிவாஜி - கே. ஆர். விஜயா
நடித்த
தங்கை

வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-30, இரவு 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
எஸ். எஸ். ஆர் - தேவிகா
நடித்த
அன்பு எங்கே?

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
ஜெய்சங்கர்
வரலக்ஷ்மி
நடித்த
உயிரா மானமா

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி: 3 காட்சிகள், போயா, பிரீபோயா 4 காட்சிகள்.
நாகேஷ்—சுந்தரராஜன்

வசந்தா
மனோரமா
கருணாநிதி
சோ

தேவை

கொழும்பு-யாழ்ப்பாணம் பாதையில் லொறி செலுத்தக்கூடிய 5 வருட அனுபவமுள்ள லொறி சாரதி தேவை. போதிய விபரங்களுடனும் இரு நற்சான்றிதழ்களுடனும் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 1198 C/o 'ஈழநாடு' யாழ்ப்பாணம். 1198

பாண்டியன் முதலிடம்

சுழிபுரம், செவ்.

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பாண்டியன் இல்லம் 170 புள்ளிகளைப்பெற்று முதலாவது இடத்தைப் பெற்றது.

சேரன் இல்லம் 144 புள்ளிகளையும், சோழன் இல்லம் 123 புள்ளிகளையும் பெற்று மூன்றாவது இடத்தையும் பெற்றன. கல்லூரி முன்றலிலுள்ள விளையாட்டு மைதானத்தில் போட்டி நடைபெற்றன. பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற வைத்திய கலாநிதியும், விளையாட்டு வீரருமான ஜீ செல்லத்துரை கலந்துகொண்டார். போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு திருமதி ஜீ. செல்லத்துரை பரிசில்கள் வழங்கினார்.

அறிவித்தல்

நல்லூர்கிராமசபைத் தலைவர் அவர்களால் 1969-ம் ஆண்டு ஆனி மாதம் 25-ம் திகதி புதன்கிழமை காலை 9-30 மணிவரையும் அரசாங்க நன்கொடை பெற்ற "முருகன்" ரோட்டு வேலைக்கும், மீன்பிடி இலாகா நன்கொடை பெற்ற "அரியாலை முனை" ரோட்டு வேலைக்கும் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரரிடமிருந்து சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் ஏற்றுக் கொள்ளப்படும். ரூபா 50/- கட்டியதன் பேரில் வழங்கப்படும் உத்தியோக பூர்வமான பத்திரத்தில் கேள்விகள் நிரப்பப்பட வேண்டும். கேள்விப்பத்திரத்துக்குரிய பத்திரங்கள் நல்லூர் கிராமசபை அலுவலகத்தில் 16-6-69 தொடக்கம் 24-6-69 பகல் 12 மணி வரையும் பத்திரம் ஒன்றுக்கு ரூபா 5/- செலுத்தியதன் பேரில் பெற்றுக் கொள்ளலாம். இது சம்பந்தமான மற்றும் விடயங்களை நல்லூர் கிராமசபை அலுவலகத்தில் அல்லது உதவி உள்ளூராட்சி அதிபர் யாழ்ப்பாணம் அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

பொ. குமாரகுலசிங்கம்,
ஜே. பி.
தலைவர்,
நல்லூர் கிராமசபை.
கிராமசபை அலுவலகம்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
8-6-69. 1599

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

புதன் 11—6—69

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை 6-45 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 61 மீ

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 மாதர் கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 49 மீ

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 ஆங்கில வகுப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததின

'ஈழநாடு' 10-வது ஆண்டு விழா

ஒல்ட்கோல்ட்ஸ், கோப்பாய் கோஷ்டிகள் வெற்றிபெற்றன

மின்னொளியில் நடைபெற்ற முதலாவது கூடைப்பந்தாட்டம்

(நமது விளையாட்டு நிருபர் 'தேவா')

யாழ்ப்பாணம், செவ்.

'ஈழநாடு' 10-வது ஆண்டு விழாவை முன்னிட்டு நடாத்தப்படும் கூடைப்பந்தாட்டம் நேற்று முன்தினம் "மின் ஒளியில்" மிகக் கோலாகலமாக ஆரம்பமானது. இப் போட்டி தொடங்குமுன்னமே போட்டி நடைபெற்ற, யாழ். மத்தியகல்லூரி கூடைப்பந்தாட்ட திடலைச் சுற்றி பல நூற்றுக்கணக்கான ரசிகர்கள் கூடிவிட்டனர். இப்போட்டி முடிவடையும்வரை விளையாட்டுத்திடலை சுற்றியிருந்த ரசிகர்கள் ஒரே கரகோஷம் செய்தவண்ணமே இருந்தனர்.

ஒல்ட்கோல்ட்ஸ் வெற்றி

முதல் போட்டியில், ஒல்ட்கோல்ட்ஸ்" விளையாட்டுக்கழகத்தினருக்கும், "யூனியர் ரெகினிக்கல்" கோஷ்டியினருக்குமிடையில் நடைபெற்றது. இப்போட்டி ஆரம்பமாகுமுன் இவ்விளையாட்டு வைபவத்துக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட, வடமாகாண கூடைப்பந்தாட்டச் சங்கத் தலைவர் திரு. எஸ். ஜெகதேவன், 'ஈழநாடு' ஸ்தாபன காரியதரிசி: திரு. திருநாவுக்கரல் ஆகியோரை வடமாகாண கூடைப்பந்தாட்ட சங்கக் காரியதரிசி திரு. ஏ. பாலசிங்கம் இரு கோஷ்டி வீரர்களுக்கும் அறிமுகம்செய்துவைத்தார்.

முதல்போட்டி ஆரம்பமாகியதும், இரு கோஷ்டி வீரர்களும் மிக வகமாக புள்ளிகளைச் சேகரிக்கத் தொடங்கிவிட்டனர். யூனியர் ரெகினிக்கல் கோஷ்டியினர் இப்போட்டியில் மிக சாதுரியமாக விளையாடிய போதிலும் பல சந்தர்ப்பங்களில், இக் கோஷ்டியினர் வாயுவேகமாக கொண்டு சென்ற பந்தை கூடையின் வாயினுள் போடாது விட்டுவிட்டனர். இடைவேளையின் போது ஒல்கோல்ட்ஸ் கோஷ்டியினர் 16 புள்ளிகளையும், யூனியர் ரெகினிகல் கோஷ்டியினர் 5 புள்ளிகளையும் பெற்றி

கோப்பாய் வெற்றி

இரண்டாவது நடைபெற்ற போட்டியில், 'யாழ். மத்திய கல்லூரியும்', 'கோப்பாய் விளையாட்டுக்கழகமும்' போட்டியிட்டன.

இடைவேளைவரை இரு கோஷ்டிகளும் நன்றாக விளையாடின. இடைவேளையின் போது கோப்பாய் கோஷ்டி 19 புள்ளிகளையும், மத்திய கல்லூரி 10 புள்ளிகளையும் பெற்றிருந்தன.

இடைவேளையின் பின் போட்டி ஆரம்பமாகியதும் கோப்பாய் கோஷ்டியினர் 'மின்னல் வேகத்தில்' புள்ளிகளைச் சேகரித்தனர். இக் கோஷ்டியின்வீரர் நவராயா பல முறை ரசிகர்களிடமிருந்து 'சபாஷ்' பெற்றுக் கொண்டா. ஆட்ட முடிவில் 44 புள்ளிகளைப் பெற்ற கோப்பாய் கோஷ்டி, 16 புள்ளிகளைப் பெற்ற யாழ். மத்திய கல்லூரியைத் தோற்கடித்தது,

கோப்பாய் விளையாட்டுக் கழகத்தின் சார்பில் ஆர். நவராயா 18, எஸ். தேவராஜேந்திரன் 12, கே. ருத்திரகுமார் 12, ஆர். செல்வராஜன் 2 புள்ளிகளையும் பெற்றனர்.

யாழ். மத்திய கல்லூரியின் சார்பில் ஏ. பத்தலிங்கம் 8, கே. ஜெயரட்ணகுமார் 8 புள்ளிகளைப் பெற்றனர்.

இப்போட்டிக்கு திரு. ரி. அருங்குணநாயகம் மத்தியஸ்தராகக்கடமையாற்றினார்

கரபந்தாட்ட போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், செவ்

ஈழநாடு 10-வது ஆண்டு விழாவை முன்னிட்டு 'மின் ஒளியில்' யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

ஐக்கிய வி. க வெற்றி

ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்கும், ஸ்ரீ விநாயக ச. ச. நிலையக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில், ஐக்கிய விளையாட்டுக் கழகம் 15-5, 15-4 புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றன. இப்போட்டிக்கு திரு. குமரையா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

வீனஸ் வெற்றி

வீனஸ் விளையாட்டுக்கழகத்துக்கும் காந்திஜி 'ஏ' ச ச நிலையத்துக்குமிடையில் நடைபெற்ற ரசிப்பான போட்டியில், வீனஸ் கோஷ்டி 15-7, 8-15, 15-8 புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இப்போட்டிக்கு திரு சதாசிவம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

கரவெட்டி வெற்றி

கரவெட்டி யூனியன் கோஷ்டிக்கும், உருத்திரபுரம் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற கடும் போட்டியில், ஈற்றில் கரவெட்டி யூனியன் 15-7, 15-9 புள்ளிகளைப் பெற்று வெற்றி பெற்றது உருத்திரபுரம் முதல் ஆட்டத்தில் மட்டும் 16-14 புள்ளிகள் வித்தியாசத்தில் வென்றது. இப்போட்டிக்கு திரு. சுப்பிரமணியம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

யாழ். க. க. வெற்றி

இன்றைய பலன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இன்னும் இவர்களுக்கு கூப்பன்கிடைக்கவில்லையாம்

முல்லைத்தீவு, செவ்.

முல்லைத்தீவுப் பகுதியில் வசித்துவரும் இந்தியத்தமிழர் பலர் கூப்பன் புத்தகங்கள் கேட்டு முல்லைத்தீவுக் காரியாதிகாரியிடம் விண்ணப்பித்திருந்தனர். ஆயினும் பல மாதங்களாகியும் இதுவரை கூப்பன்கள் வழங்கப்படவில்லை, விண்ணப்பித்தவர்கள் யாவரும் கூப்பன் பெற அருகதையானவர்களாம் காரியாதிகாரி சம்பந்தப்பட்ட விண்ணப்பங்களையும் அவற்றுக்கு ஆதாரமான பத்திரிரங்களையும் வவனியா உணவுக் கட்டுப்பாட்டதிகாரியின் கவனத்துக்கு அனுப்பிவைத்து பல மாதங்களாகியும் இதுவரை அங்கிருந்து பதில்கிடையாததால் காரியாதிகாயு மேற்படி விண்ணப்பகாரருக்கு கூப்பன்களை வழங்க முடியாதிருப்பதாக அறியப்படுகிறது.

களவாடிய வீட்டிலேயே கோழியைசமைத்துஉண்டனர்

சுழிபுரம், செவ்.

3 கோழிகளை ஒரு வீட்டில் களவாடிய சிலர் அவற்றை அதே வீட்டில் வைத்துச் சமைத்துச் சாப்பிட்ட சம்பவம் ஒன்று மாதகல் வாய்க்கால் பகுதியில் நடைபெற்றுள்ளது. இச்சம்பவம் நடைபெற்ற சமயத்தில் வீட்டில் ஒரு வயோதிபர் மாத்திரம் இருந்ததாகவும் ஏனையோர் அங்குள்ள கோயில் ஒன்றின் திருவிழாவுக்குச் சென்றுவிட்டதாகவும் கூறப்படுகிறது.

கோழிகளை வெட்டுவதற்குப் பாவிக்கப்பட்ட கத்தி ஒன்றையும் அவர்கள் சமையல் அறையில் விட்டுச் சென்றுள்ளதாகவும் அங்கிருந்த சமையல் பொருட்களையே பாவித்து கோழியைச் சமைத்துள்ளதாகவும் வீட்டுச் சொந்தக்காரரான எஸ். விஸ்வலிங்கம் சங்கானைப் பொலிசில் புகார் செய்துள்ளார். சமையல் அறையில் விட்டுச் சென்ற கத்தியின் சொந்தக்காரரைக் கண்டு பிடித்துவிடலாம் எனப் பொலிசார் கருதுகின்றனர்.

கவணாவத்தை வேள்வி

பண்டத்தரிப்பு, செவ்வாய்

அண்மையில் வடபகுதியில் பிரசித்தி பெற்ற வேள்வித்தலமான கவணாவத்தையில் வேள்வி நடைபெற்றது. அன்றையதினம் ஆயிரக்கணக்கான ஆட்டுக் கடாக்களும் கோழிகளும் பலியிடப்பட்டன.

நெடுந்தீவுக்கு தனியாக எம் பி. வேண்டுமாம்

நெடுந்தீவு, செவ்.

நெடுந்தீவுக்கென தனியாக ஓர் ஆட்சிமன்ற உறுப்பினர் இருக்கவேண்டும். 4000 வாக்காளரோடு மிகிந்தலையில் தனியாக ஒரு ஒரு எம். பி. தெரிவு செய்யப்படும்போது, 4000க்கு மதிகமான வாக்காளர் உள்ள நெடுந்தீவை ஏன் ஒரு தொகுதியாக ஆக்க முடியாது? என நெடுந்தீவு வாலிபர் இயக்கக் கூட்டத்தில் பேசும்போது திரு. யே. அருளானந்தம் கேட்டார்.

30 சதுர மைலோ அல்லது 15,000 வாக்காளருக்கோ குறையாமல் இருந்தால் தனியான ஒரு தொகுதியாக இருக்கலாம் என ஒரு விதி இருப்பதாகக் கூறிய அவர், 35 சதுரமைல் விஸ்தீரணமுள்ள நெடுந்தீவை தனித் தொகுதியாக வைக்கமுடியும் என்றும் கூறினார். இது சாத்தியமாகாத பட்சத்தில் நயினாதீவு, அனலைதீவு எழுவைதீவு ஆகிய இடங்களைச்சேர்த்தாவது உடனடியாக ஒரு தொகுதி ஆக்க வேண்டும் என்றும், வசதி குறைந்த இடங்களான தீவுப்பகுதியைக் கவனிக்க தனி எம். பி. ஒருவர் அவசியம் தேவை என்றும் கேட்டுக்கொண்டார். இதற்கான முயற்சிகளில் சம்பந்தப்பட்ட கிராமசபைகள் அக்கறை காட்டவேண்டும் என்றார் அவர்.

ஈழநாடு

புதுகப் போட்டி (7)

மனோரமா
கருணாநிதி
சோ
நடித்த

ஆலயம்

மகத்தான 2-வது வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) — வெம்பிளி (கண்டி)
ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை) — விஜயா (மட்டுநகர்)

மற்றும் சில சினிமாஸ் திரைகளில் காண்பிக்கப்படுகின்றது

ஜெய்சங்கர் - ஜெயலலிதா
நாகேஷ் - மனோரமா - சோ
குமாரி சச்சு, சுந்தரராஜன்
நடித்த

பொம்மலாட்டம்

திரைக்கதை வசனம் சோ.
இசையமைப்பு வி. குமார்

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
James Coburn,
Dick Shawn
in
What did you do in the war Daddy ?
(Color)

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45P.M.
Robert Redford, Janefonda
in
BARE FOOT IN THE PARK
(Techni Color)

யாழ். வின்ஸர் வெண்திரையில்

தினசரி 4 காட்சிகள்

★ சிவாஜி கணேசன்
★ பத்மினி
★ கே. ஆர் விஜயா
★ நாகேஷ்
★ எம். என். நம்பியார்
★ சிவகுமார்
★ சௌகார்ஜானகி ★ மனோரமா
★ பேபி பத்மினி ★ ராஜசுலோசனா

மற்றும்பலர் நடித்த

திருமால் பெருமை

இன்றைய பலன்

11-6-69

வைகாசி மாதம்

29-ம் திகதி

புதன்கிழமை

திதி- துவாதசி இரவு 12-51 மேல் திரயோதசி.

நட்சத்திரம்- அச்சுவினி பகல் 10 மேல் பரணி.

ராகுகாலம்- 11-52 1-22.

சுபநேரம்- 4-22 — 5-52.

இன்று பிறந்தவர்களுக்கு— புகழ் கொடி கட்டிப் பறக்கும், பொருளாதாரத்தில் மந்தநிலையையேகுறிப்பிடுகின்றது. சிலர் வாழ்க்கையில் கடன் படநேரிடும். நண்பர்கள் உதவிக்கு வருவர். பிரயாணத்தில் பொருள் நழுவக்கூடும். டாக்டர்களுக்கு மிகவும் செல்வாக்கான ஆண்டு. சிலர் வாழ்க்கையில் தொழில் மாற்றமும் ஏற்படலாம்

மேஷம்- அடி சறுக்கும் ஆணவத்தை அடக்கு.
ரிஷிபம்- சொற்சிறப்பு, சொகுசான வாழ்வு.
மிதுனம்- தடைகள் தாக்கும், தாமதமிகுதி.
கடகம்- தாய்வழிப் பெருமை, தரமான வாழ்வு.
சிம்மம்- புத்திரர் புகழ் புதிய உற்சாகம்.
கன்னி- கழுகுப்பார்வை கவலையின் தாக்குதல்.
துலாம்- இல்லறம் இனிக்கும், இணைப்பும் இறுகும்
விருச்சிகம்- பொருள் நழுவும் போக்குவரத்தைத் தவிர்.
தனுசு- இறைபக்தி, இனியவை நடக்கும்.
மகரம்- மனம்போல் வாழ்வு, மனஅமைதி.
கும்பம்- நண்பர்கள் உதவுவர், நல்லநாள்.
மீனம்-புதிரானவாழ்வு, மனக்கவலை.

— சோதிடக்கலாநிதி —

திருமலை வேலுப்பிள்ளை

வென்றது. இப்போட்டிக்கு திரு. சுப்பிரமணியம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

யாழ். க. க. வெற்றி

யாழ். கரபந்தாட்டக் கழகத்துக்கும், சென். ஜோசப் விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் நடைபெற்ற போட்டியில் யா. கரபந்தாட்டக் கழகம் 15 8, 15—8 புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றன. இப்போட்டிக்கு திரு. குமரையா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

உடுப்பிட்டி வெற்றி

உடுப்பிட்டி கோஷ்டிக்கும் வீனஸ் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற கவர்ச்சியான 'செட்டப்'' போட்டியில் உடுப்பிட்டி கோஷ்டி 15—9, 15 9 புள்ளிகள் வித்தியாசத்தால் வெற்றி பெற்றது. இப்போட்டிக்கு திரு. குமரையா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

(தே. நி)

தமிழ்ச் சங்க

வள்ளுவர்விழா போட்டிமுடிவுகள்

பேராதனை. செவ்

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கம். வள்ளுவர் விழாவையொட்டி நடத்திய கவிதை, கட்டுரைப் போட்டிகளில் வெற்றிபெற்றோர் விபரம் வருமாறு:

'என்னபயத்ததோ சால்பு' என்னும் தலைப்பில் நிகழ்ந்த கவிதைப் போட்டியில திரு. ஆ. மகாதேவன் முதற்பரிசையும், திரு. செ. சீவரத்தினம் இரண்டாவது பரிசையும், செல்வி புவனேஸ்வரி குமாரசாமி மூன்றாவது பரிசையும் பெற்றுள்ளனர்.

உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்ற தலைப்பில் நிகழ்ந்த கட்டுரைப்போட்டியில் திரு. பொ. மாணிக்கவாசகர், செல்வி எம் மனோன்மணி, செல்வி பு. குமாரசாமி ஆகியோர் முறையே 1-ம். 2-ம், 3-ம், இடங்களைப் பெற்றுள்ளனர். வெற்றியீட்டியவர்களுக்கு தமிழ்ச் சங்கம் நடாத்திய வள்ளுவர் விழாவில் கலாநிதி சு. வித்தியானந்தன் வெள்ளிக்கிண்ணங்களை வழங்கினார்.

குருபூசை

உரும்பராய்'செவ்

கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலயத்தில் சம்பந்தர் குருபூசை கொண்டாடப்பட்டது. தலைமையாசிரியர் திரு வ கந்தையா தலைமையில்நடைபெற்ற இவ்விழாவில் சைவப்புலவர் சு. செல்லத்துரை உட்படபலர் பேசினர்.

கறை காட்டவேண்டும் என்றார் அவர்.

ஈழநாடு புளுகுப் போட்டி - (7)

கேலிக்கதை என்ற பகிடிக்கும் புளுகுக்கும் வித்தியாசம் தெரியாமல் பல நேயர்கள் பகிடிகளை எழுதி இந்த புளுகுப் போட்டிக்கு அனுப்புகிறார்கள். போட்டிக்குழு புளுகுகளையே விரும்புகிறது. வேண்டுமானால் இன்னொரு சமயம் ஒரு பகிடிப் போட்டியை நாம் ஆரம்பிப்போம்.

பரிசு பெறும் புளுகு

இம்முறை பரிசு பெறும் புளுகு இதுதான்:-

'அன்று ஒரு ரூபாய் 50 சதத்துடன் டாக்ஸியில் ஏறிவிட்டேன். நான் போகவேண்டிய இடத்தில் அதை நிறுத்தியபோது மீட்டர் ஒரு ரூபாய் 70 சதம் என்று காட்டியது. உடனே நான் பின்னால் சிறிது தூரம் 'றிவேர்சில்' போகும்படி உத்தரவிட்டேன். சிறிது தூரம் செல்ல மீட்டர் ஒரு ரூபாய் 40 சதம் என்று காட்டியது. நான் அவ்விடத்தில் இறங்கி மீதி பத்து சதத்துடன் நடந்து சென்றுவிட்டேன்'.

எழுதியவர்: கு. குகானந்தன், 131 1, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

பாராட்டுக்குரியவை

பின்வரும் நேயர்களின் புளுகுகளும் பாராட்டுக்குரியவை. இராஜேந்திரன், மேபா வ. துரைராசா, அம்மன் வீதி, திருநெல்வேலி, முத்துவண்ணன்ஜெயராம், கிரீன்லண்ட்ஸ் ஹோட்டல், கொழும்பு-4, அ. சுசீலா, ஆனந்தம்வடலி வீதி, அரியாலை. த. பரமலிங்கம், அடப்பன் வீதி, யாழ்ப்பாணம், இ. விநாயகலிங்கம், சுன்னாகம்.

அடுத்த போட்டி

ஐம்பது சொற்களுக்கு மேற்படாமல் ஒரு ஹாஸ்யமான கற்பனை புளுகை அடுத்த போட்டிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்

ஒருவர் எத்தனை புளுகுகளையும் எழுதி ஒரே உறையில் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு புளுகுடனும் கீழ்க்காணப்படும் கூப்பன் ஒன்று இணைக்கப்பட வேண்டும். அனுப்ப வேண்டிய விலாசம்: புளுகுப்போட்டி (7) 'ஈழநாடு', த. பெ. இலக்கம், 49, யாழ்ப்பாணம்.

விடைகளை'ஈழநாடு' காரியாலயத்தில் நேரடியாகவும் சமர்ப்பிக்கலாம். எல்லா விஷயங்களிலும் போட்டிக் குழுவின் தீர்ப்பே முடிவானது. போட்டி சம்பந்தமான எவ்வித கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ள வேண்டாம். ஈழநாடு ஊழியர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் இப்போட்டியில் கலந்து கொள்ள முடியாது. மிகச் சிறந்ததெனக் கருதப்படும் புளுகுக்கு ரூபா ஐந்து (ரூ. 5/-)பரிசுப் பணமாக வழங்கப்படும். போட்டி முடிவு திகதி 15-6-69. வெற்றிபெறும் புளுகும் அதைப் புனைந்தவரின் பெயரும் 18-6-69 இல்வெளியாகும்.

'ஈழநாடு'
புளுகுப் போட்டி -(7)

பெயர் : .....

விலாசம் : .....

.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் அதிக துருப்புகளை அமெரிக்கா விலக்கிக்கொள்ளும்

அமைதி நெருங்கி வருவதாக யு. எஸ். பாதுகாப்பு அமைச்சர் கூறுகிறார்

வாஷிங்டன், ஜூன் 10 தென்வியட்னாமிலிருந்து 25ஆயிரம் துருப்புக்களை ஆகஸ்ட் மாத இறுதிக்குள் விலக்கிக் கொள்வதென்று அதிபர் நிக்ஸன் செய்துள்ள தீர்மானம் அமெரிக்காவை அமைதியின் அருகாமைக்கு கொண்டுபோய் இருக்கிறது என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் திரு. லெயார்ட் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

மேற்கொண்டும் துருப்புகளை விலக்கிக் கொள்வது பற்றி அடிக்கடி பரீசீலனை நடத்தப்படும் என்றும் இன்னும் இரண்டொரு மாதங்களில் மேலும் சிலதுருப்புகள் விலக்கிக் கொள்ளப்படுவார்களென்றும் திரு. லெயார்ட்கூறினார்.

தென் வியட்னாமிலிருந்து முதலில் சாதாரண ராணுவத்தினரும் கடற்படையினருமே விலககிக் கொள்ளப்படுவார்கள். விமானப்படை அதிகாரிகளும், கடற்படை அதிகாரிகளும் இதில் அடங்கமாட்டார்கள். இதையும் திரு.லெயார்டே அறிவித்தார்.

கலப்பு அரசு பற்றி பேசினால் கடும் தண்டனை கிடைக்கும்

தென்வியட்னாமில் கம்யூனிஸ்டுகளுடன் கலப்பு அரசாங்கம் அமைக்க வேண்டுமென்று எவராவது பிரசாரம் செய்தால் அவருக்கு கடும் தண்டனை விதிக்கப்படும் என்று தென் வியட்னாம் அதிபர் வான்தியூ அறிவித்துள்ளார்.

பத்திரிகை நிருபர்கள் மகாநாடொன்றில் பேசிய திரு. தியூ, கம்யூனிஸ்ட்டுக்களுடன் கலப்பு அரசாங்கம் அமைப்பதென்பது கம்யூனிஸத்துக்கு எதிரான நாட்டின் அரசியல் திட்டத்துக்கே முரண்பட்ட கருத்தாகும் என்றார். கலப்பு அரசாங்கம்பற்றி எவரும் பிரசாரம் செய்யக் கூடாது என்று அவர் குறிப்பிட்டார்.

தென்வியட்னாமிலிருந்து 25 ஆயிரம் அமெரிக்கதுருப்புகள் விலக்கிக் கொள்ளப்பட விருப்பதுபற்றி திரு. தியூ நிருபர்களிடம் பேசினார். தென் வியட்னாமுக்கும் அமெரிக்காவுக்குமிடையில் உள்ள நல்லெண்ணத்தின் பேரில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

திரு. வான் தியூவுடன் கொள்கைரீதியில் கருத்து வேறுபாடு கொண்டிருப்பதாகக் கருதப்படும் உபஜனாதிபதி திரு. கா-ஓ-கீ பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் கலந்து கொள்ளவில்லை.

அமெரிக்கரை திருப்தி செய்யும் வெறும் கேலிக்கூத்து

தென் வியட்னாமிலிருந்து 25 ஆயிரம் அமெரிக்கதுருப்புகளை ஆகஸ்ட் முடிவுக்குள் விலக்கிக் கொள்ளப் போவதாக அதிபர் நிக்ஸன் அறிவித்திருப்பதுவெறும் கேலிக்கூத்தென்று வியட்னாம் பிரச்னைக்கு தீர்வுகாண்பதற்கென பாரிஸில் நடைபெறும் மகாநாட்டில் கலந்து கொள்ளும் வடவியட்னாம் பிரதிநிதி யொருவர் தெரிவித்துள்ளார். ஆத்திரம் கொண்டுள்ள அமெரிக்க மக்களைத் திருப்திப்படுத்துவதற்காக செய்யப்படும் கேலிக் கூத்து இது வென்று அந்தப் பிரதிநிதி பாரிஸில் கூறினார்.

வெறும் பிரசாரம்

அமெரிக்க அதிபர் செய்துள்ள முடிவு வெறும் பிரசார நடவடிக்கை யென்று சோவியத் பத்திரிகையான இஸ்வெஸ்தியா கருத்து வெளியிட்டிருக்கின்றது.

பிலிப்பைன்ஸ் அதிபர் மார்கோஸ் அதிபர் நிக்ஸனின் முடிவு பற்றி கருத்து வெளியிடுகையில் அமைதிக்கு ஒருவாய்ப்பு என்றும் இந்த நடவடிக்கையை எதிர்தரப்பாரும் பின்பற்றவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சோவியத் வெளிஉறவு மந்திரி

'தந்தையின் வழியில் முந்திநிற்கின்ற மைந்தன்'

புதிய ஜே. பி. கயிலைநாதனுக்கு உதவி அரசாங்க அதிபர்பாராட்டு

யாழ்ப்பாணம், புதன் 'திரு. கயிலைநாதன் தந்தையின் வழியில் முந்திநிற்கின்ற மைந்தன்' என யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. த. முருகேசம்பிள்ளை, திரு. கயிலைநாதனைப்பாராட்டினார்.

யாழ். நகரமண்டபத்தில், யாழ். ஐக்கிய லாபநிதிச் சங்க சிறுப்பர் திரு. கயிலைநாதன் சமாதான நீதிபதியாக நியமனம் பெற்றதைப் பாராட்டு முகமாக சென்ற வெள்ளிக்கிழமை நடைபெற்ற பாராட்டுவிழாவில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. கயிலைநாதனை, பல பிரமுகர்கள் யாழ்ப்பாணம் வாடிவீட்டிலிருந்துமாலைகள் சூட்டி ஊர்வலமாக யாழ். நகரசபை மண்டபத்துக்கு அழைத்துவந்தனர்.

முதலியார் செ. முத்துத் தம்பி தமது தலைமையுரையில் கூறியதாவது.

''ஊருக்கு நடுவே பழுத்துள்ள மரக்கனிகள் ஊரவர் யாவருக்கும் பயன்படுவது போல கடந்த காலத்தில் நம்மத்தியில் வாழ்ந்து வந்த சிறுப்பர் கனகசபையின் செல்வம் சிவபுண்ணியத்துக்கும், பசு புண்ணியத்துக்கும் பயனாக அமைந்ததை இந்த நாட்டினர் அறிவர் இல்லையென்ற பதத்தையே என்றும் தன்வாயால் சொல்லாமல் வாழ்ந்த பெருமகன் அவர். அவரது அடிச்சுவட்டில் அவரது மகனான திரு. கயிலைநாதன் செல்லுகின்றார்.

திரு. கயிலைநாதனைப் பெறுவதற்கு எவ்வளவு தவத்தை கனகசபை செய்தார்களோ, அந்த அளவுக்கு அவருக்கு மகனாகப்பிறக்க திரு. கயிலைநாதன் புண்ணியஞ்செய்துள்ளார். திரு. கனகசபை வழங்கிய நன்கொடைகளை பல ஆலயங்களும், பள்ளிக்கூடங்களும், ஏழைகளும் மறந்து விடவில்லை. வலதுகை கொடுப்பதை இடதுகைஅறியக்கூடாது என்பதே அவரது சித்தாந்தம்.''

திரு. எஸ்.ஆர். கனகநாயகம், திருவாளர்கள் திரு. தா. ச. சங்கரப்பிள்ளை, ச. அம்பிகைபாகன், நம. சிவப்பிரகாசம், த. சுப்பிரமணியம், இ. மகாதேவன், வி. ரி. மயில்வாகனம், மு. மயில்வாகனம், கு. தனபாலசிங்கம், ஜனாப் எம். எம் அப்துல் குத்தூஸ் ஆகியோரும் பேசினர்.

திரு. கயிலைநாதன் நன்றி தெரிவிக்கையில் தந்தை பணியைத்தன்னாலானவயின் கையில் தொடர்ந்து செய்ய இறைவன் அருள்கிடைக்க வேண்டுமெனக் குறிப்பிட்டார்.

கவிஞர் இ. நாகராஜன் வாழ்த்துப் பாமாலை வழங்கினார். திரு. கணபதிப்பிள்ளை நன்றியுரை கூறினார். கூட்ட ஆரம்பத்தில் சகலருக்கும் சிற்றுண்டி தேநீர் வழங்கப்பட்டது. கூட்ட இறுதியில் அரியாலை ஸ்ரீகலைமகள்நாடக மன்றத்தினரின் 'ஸ்ரீவள்ளி கலியாணம்' என்ற புராண நாடகம் நடைபெற்றது.

''தகா' உதவினால் காலியிலிருந்து ரப்பர் ஏற்றுமதி செய்யலாம்'

— வர்த்தக அமைச்சர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கால், செவ். இலங்கையின் சரித்திரத்தில் என்றுமில்லாதவாறு [illegible] முன்னிலை வகிப்பதாகவும், அண்மையில் தாம் ஆபிரிக்காவுக்கு விஜயம்

ஏழாலை கி. ச. தேர்தல்முடிவுகள்

அளவெட்டி, செவ்வாய் ஏழாலை கிராமசபைத்தேர்தல் முடிவுகள் வருமாறு:-

1-ம் வட்டாரம் திரு. ரி. துரைராசா, 2-ம் வட்டாரம் திரு.எஸ். சண்முகவடிவேலு, 3-ம் வட்டாரம் எம். நாகலிங்கம், 4 ம் வட்டாரம் எம். சின்னத்தம்பி, 5-ம் வட்டாரம் எம். இரத்தினம், 6-ம் வட்டாரம் கே. கந்தையா, 7-ம் வட்டாரம் எஸ். இராசையா, 8-ம் வட்டாரம் கே. சிவகுரு, 9-ம் வட்டாரம் எஸ். தர்மலிங்கம், 11-ம் வட்டாரம் என். வேலுப்பிள்ளை, 12-ம் வட்டாரம் என். பாலசிங்கம், 13ம் வட்டாரம்: திரு. பி. கந்தையா, 14ம் வட்டாரம்: கே. வல்லிபுரம், 15ம் வட்டாரம்: வி. தம்பிப்பிள்ளை, 16ம் வட்டாரம்: எம். தெய்வேந்திரம், 17ம் வட்டாரம்: கே. இராசேந்திரம், 18ம் வட்டாரம்: என். தம்பிராசா.

10ம்வட்டார உறுப்பினர் திரு. கந்தையாவும், 19ம் வட்டார உறுப்பினர் திரு. எஸ். செல்லத்துரையும் ஏற்கனவே போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டனர்.

— —

ஆசிரியர் பற்றிய தீர்மானம்

மட்டக்களப்பு, வெ. ஸ்ரீலங்கா ஜாதிக குரு சங்கத்தின் கல்முனைக் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் சங்கத் தலைவர் ஜனாப் ஏ. எம். ஏ. மஜீத் தலைமையில் கல்முனை சாகிறா கல்லூரி கலைமண்டபத்தில் நடைபெற்றபோது ஆசிரியர் ஜனாப் எம். அலியார் கொண்டுவந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

ஆசிரியர்களுக்கு அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் உரிமைகள், சலுகைகள் கிடைப்பதாயில்லை. ஆசிரியர்கள் அரசாங்க ஊழியர்களா, இல்லையா என்பதைத் தீர்மானிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று அத்தீர்மானம் கூறுகின்றது,

— —

சிறுப்பர் கதிரவேலு உருவப்படம்

உரும்பிராய், செவ். சண்டிலிப்பாய் வடக்கு தமிழ்க் கலவன் பாடசாலை ஸ்தாபகரான திரு. கதிரவேலுச்சிருப்பரின் திருவுருவப்படத்தை பாடசாலை மண்டபத்தில் உடுவில் எம்.பி.திரு.



யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடைபெற்ற ஈழநல்லூர் சகோதரிகளான மோகனா, சாந்தனா, நந்தனா சகோதரிகளின் பரதநாட்டிய நிகழ்ச்சிக்கு சங்கீத கலாநிதி சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை தலைமைதாங்கிப் பேசிக்கொண்டிருக்கிறார். கலையரசு சொர்ணலிங்கம் அருகில் நிற்கிறார்

ஈழநாடு 10-வது ஆண்டு நிறைவு விழா

நிகழ்ச்சிகள்

12-6-69 வியாழக்கிழமை

உடற்பயிற்சி

ஏ பிரிவு அரைஇறுதிப்போட்டி - யாழ் மத்தியகல்லூரி மைதானம் மு. ப. 8-30 மணி.

ஏ பிரிவு இறுதிப் போட்டி யாழ். மத்திய கல்லூரி பி. ப. 2-30 மணி.

வலைப்பந்தாட்டம்

கனிஷ்ட பிரிவு இறுதிப்போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானம் பி. ப. 4 மணி.

சிரேஷ்ட பிரிவு இறுதிப்போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானம் பி. ப. 4 மணி.

உதைபந்தாட்டம்

1. இறுதிப்போட்டி கோட்டை மைதானம் பி. ப. 4-30 மணி.

கரபந்தாட்டம்

1. கால் இறுதிப்போட்டி யாழ். மத்தியகல்லூரி மைதானம் பி. ப. 4-30 மணி.

கூடைப்பந்தாட்டம்

1. கால் இறுதிப் போட்டிகள் யாழ். மத்தியகல்லூரி மைதானம் பி. ப. 6 மணி.
2. அரை இறுதிப்போட்டிகள் யாழ். மத்திய கல்லூரி மைதானம் பி. ப. 8 மணி.

பேச்சுப்போட்டி

கனிஷ்ட பிரிவு இறுதிப்போட்டி யாழ். வேம்படி மகளிர் கல்லூரி பி. ப. 3 மணி.

மத்தியபிரிவு இறுதிப்போட்டி யாழ். வேம்படி மகளிர் கல்லூரி பி. ப. 3 மணி.

துள்ள முடிவு வெறும் பிர டும் என்றும் குறிப்பிட்டுள்
ளும் பிரதிநிதி யொடுவர் சார நடவடிக்கை யென்று ளார்.

சோவியத் வெளிஉறவு மந்திரி குரோமிக்கோவ் கெய்ரோ விஜயம்

கெய்ரோ, ஜூன் 10

சோவியத் வெளிநாட்டு அமைச்சர் திரு. குரோமிக்கோவ் மேற்காஸிய நிலைமை குறித்து ஆலோசனைகள் நடத்துவதற்காக இன்று கெய்ரோவுக்கு விஜயம் செய்கின்றார். அவருடன் உதவி வெளிநாட்டமைச்சர் திரு. சென் யோக்கும் வருகின்றார்.

கெய்ரோவில் திரு. குரோமிக்கோவ் இரண்டு அல்லது மூன்று நாட்கள் தங்கி அதிபர் நாஸரோடும், வெளிநாட்டமைச்சர் திரு. ரியார் டோடும் ஆலோசனைகள் நடத்துவார்.

ஆறு மாதங்களுக்கு முன்பும் திரு. குரோமிக்கோவ் எகிப்துக்கு விஜயம் செய்தார். மேற்காஸிய நெருக்கடி தீர்வுக்கான சோவியத் திட்டம் பற்றி விளக்குவதற்காக அவர் அப்பொழுது வந்திருந்தார்.

பிரிட்டனில் மூன்று முக்கிய இலங்கை அதிகாரிகள்

லண்டன், ஜூன் 10

தற்போது இங்கிலாந்திற்கு விஜயஞ்செய்திருக்கும் சிரேஷ்ட இலங்கை அரசாங்க அதிகாரிகள் மூவர் அண்மையில் வேல்ஸ் மாகாணத்தில் ஆறு நாள் சுற்றுப்பிரயாணம் ஒன்றை மேற்கொண்டனர். இந்தச் சுற்றுலாவின்போது வேல்ஸ் மாகாணத்தின் தலைநகரான கார்டிவிலுள்ள ''சமாதான, சௌக்கிய மண்டபத்திற்கும்'' இவர்கள் விஜயஞ் செய்தனர். இம்மண்டபத்திலுள்ள அரசாங்க அலுவலகத்தில் தான் இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்தை சோல்பரிக் கமிஷனர் தயாரித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தபால் மா அதிகாரி திரு வி. எம். அபயசேகரா, மந்திரிசபைக் காரியதரிசி திரு ஏ. எஸ் கே. விக்கிரம, திருகோணமலை அரசாங்க அதிபர் திரு. எஸ். குணதிர ஆகியோரே இம்மூன்று அரசாங்க அதிபர்களுமாவர். பிரிட்டிஷ் வெளிநாட்டு, சாம்ராஜ்யக் காரியாலயத்தின் அழைபபின் பேரில் இவர்கள் பிரிட்டனுக்கு ஒரு மாத விஜயத்தை மேற்கொண்டிருக்கிறார்கள்.

வேல்ஸிலுள்ள சரித்திரப் பிரசித்திபெற்ற கரனவன் கோட்டைக்கும் இவர்கள் விஜயஞ்செய்தனர். இங்குதான் எதிர்வரும் ஜூலை 1ந் திகதி இளவரசர் சாள்ஸ் வேல்ஸ் இளவரசராகப் பட்டமளிக்கப்படவிருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் வல்ஸ் தலைநகருக்குச் செல்வதற்கு முன்பாக மின்சக்தி நிலையம் ஒன்றிற்கும், ஆராய்ச்சிப் பண்ணைகளுக்கும் விஜயஞ் செய்தனர்.

லண்டனில் இவர்கள் தங்கியிருந்தபோது வீடமைப்பு, ஸ்தலஸ்தாபன அமைச்சு, வர்த்தக அமைச்சு, மகாதபாற் காரியாலயம், பொருளாதார விவகாரக் காரியாலயம், மந்திரிசபைக் காரியாலயம் ஆகியனவற்றிற்கு விஜயஞ்செய்து அங்குள்ள அரசாங்க அதிகாரிகளுடன் சம்பாஷணையை நடத்தினர். இம்மாதம் 20ந் திகதியளவில் இவர்கள் தாயகம் திரும்புவார்கள்.

— —

வரவேற்பு

லண்டன், ஜூன் 10

ஆகஸ்ட்மாத இறுதிக்குள் தென்வியட்னமில் இருந்துவரும் படைவீரர்களில் 25 ஆயிரம் படைவீரர்களை விலக்கிக் கொள்வதென்ற அமெரிக்க ஜனதிபதி திரு நிக்ஸனின் முடிவை நியூசிலாந்து பிரதமர் வரவேற்றுள்ளார். நல்ல முடிவு என அவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் செய்திஸ்தாபனமான 'டாஸ்' இந்த முடிவு சம்பந்தமாக குறை தெரிவித்துள்ளது.

— —

கேரள முதல்வர் பிறந்த நாள்

திருவனந்தபுரம், ஜூன் 10

கேரள முதல் மந்திரி திரு. நம்பூதிரிபாத் இன்று தனது 10 வது பிறந்த தினத்தைக் கொண்டாடினர்.

ஸ்கொட்லாந்தில் இலங்கை வர்த்தக கமிஷனர்

லண்டன், ஜூலை 10

இலங்கை உட்பட 23 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கோஷ்டி ஒன்று ஸ்கொட்லாந்து விவசாய, மீன் பிடி இலாகாவின் அழைப்பின்பேரில் ஸ்கொட்லாந்திற்கு விஜயஞ்செய்தது. இலங்கைப் பிரதிநிதியாக இலங்கை வர்த்தகக் கமிஷனர் திரு. எல். ஜே. மரியதாசன் இவ்விஜயத்தை மேற்கொண்டார்.

ஸ்கொட்லாந்தில் உள்ள நவீன பண்ணைகள், உணவு பதனிடும் தொழிற்சாலை, மிருக போஷாக்கு ஆராய்ச்சி நிலையம், விஸ்கி வடிக்கும் ஆலை போன்றனவற்றிற்கு இவர்கள் விஜயஞ்செய்தனர். எலிசபெத் மகாராணியாரின் ஸ்கொட்லாந்தில் உள்ள வாசஸ்தலமான பல்மோரல் மாளிகைக்கும் இக்கோஷ்டியினர் விஜயஞ்செய்தனர்.

இவர்களது சுற்றுப்பிரயாணத்தின் முடிவில் ஸ்கொட்லாந்தின் ராஜாங்க உதவி மந்திரியான திரு. நோர்மன் இவர்களுக்கு எடின்பேர்க் மாளிகையில் இராப்போசன விருந்துபசாரம் ஒன்றை அளிப்பார்.

— —

10 வருட சிறை

காலி, செவ்.

கொலைக்குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவருக்கு காலி அசைஸ்நீதிமன்றம் 10வருட கடுங்காவல் தண்டனைவிதித்துத் தீர்ப்பளித்தது.

அகங்கம பொலிஸ்வட்டாரத்தைச்சேர்ந்த எல். ஏச். ஜோதிபாலா என்பவரை பி. ஜி. சிறிசேன கத்தியால் வெட்டிக்கொலைசெய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட இவ்வழக்கு காலி அசைஸ்நீதிமன்றத்தில்நீதியரசர்கிறெஸ்டர்முன் விசாரணைசெய்யப்பட்டது ஜூரிகள் கைமோசக்கொலையென ஏகமனதாகத்தெரிவித்தனர்

திரு. சுசில் சில்வா அரசாங்க தரப்பிலும் அட்வகேட் ஸ்டான்லி திலகரட்ண எதிரி சார்பிலும் ஆஜரானர்கள.

...தகா உதவியுடன் காலியிலிருந்து ரப்பர் ஏற்றுமதி செய்யலாம்'

— வர்த்தக அமைச்சர்

காலி, செவ்.

இலங்கையின் சரித்திரத்தில் என்றுமில்லாதவாறு பொருள்களின் விலை சந்தைகளில் உயர்ந்துகொண்டு போகிறது. இது உற்பத்தியாளருக்கு உதவியாக இருக்கும்' என வர்த்தக அமைச்சர் திரு. கியூ. பெர்ணண்டோ காலியில் அமைக்கப்பட்ட ரப்பர் கொள்வனவு நிலையத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் கூறினர்.

உள்நாட்டமைச்சர் திரு. டபிள்யூ. தகநாயக்கா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வர்த்தக அமைச்சர் தொடர்ந்து பேசுகையில், காலி மாவட்டத்தைச் சேர்ந்த பலர் வியாபாரத்தில் முன்னிலை வகிப்பதாகவும், அண்மையில் தாம் ஆபிரிக்காவுக்கு விஜயம் செய்தபோது அங்கும் காலியைச் சேர்ந்த பல சிங்கள மக்கள் வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருந்ததாகவும் கூறினர். காலியில் 20,000 சதுர அடி நிலத்தை உள்நாட்டமைச்சர் ஒதுக்கித் தருவாரேயானல், காலித் துறைமுகத்திலிருந்து ரப்பரை ஏற்றுமதிசெய்யத் தாம் ஒழுங்குசெய்துவருவதாகவும் கூறினர். உள்நாட்டமைச்சர் திரு. தஹநாயகா பேசுகையில், நாட்டின் பொருளாதார உற்பத்திக்கு வர்த்தக அமைச்சர்காட்டும் அக்கறைக்கு நன்றி கூறினர்

'நக்கீரர் பரம்பரை இன்று சோர்ந்து கிடக்கிறது'

கோப்பாய், செவ்.

''நக்கீரர் பரம்பரையில் வந்த தமிழ்ச் சமுதாயம் இன்று அறிவோடு இயங்காது சோர்ந்து கிடக்கின்றது. இத்தகைய சமுதாயத்தை நல்வழிப்படுத்த எழுந்த நூலே திருக்குறளாகும். தமிழுலகம் கண்ட இலட்சிய முறையை வகுத்துக் கூறியதோடு அமையாது, பழந்தமிழ் மக்களின் நாகரிகம், சமயம், பண்பாடு, கலாச்சாரம் இவைகளை எடுத்தியம்புவதும் அதுவேயாகும். வள்ளுவரது தத்துவத்தின்படி நமது வாழ்க்கை முறை அமையுமாயின் நமக்குள்ளே அறிவு இயக்கம் மேலோங்கி சாதிப் பிரச்னை, மூடப் பழக்கங்கள் அழிந்தொழியும் என்பது உறுதியான கருத்தாகும்.''

இவ்வாறு இருபாலை மத்திய சனசமூக நிலையத்தாரால் நடாத்தப்பட்ட திருவள்ளுவர் 2000 ஆண்டு நிறைவு விழாவுக்கு தலைமை வகித்து உரை நிகழ்த்துகையில் கோப்பாய் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை கூறினர்.

அவர் மேலும் பேசும்போது ''கடந்த 2000 ஆண்டுகளுக்கு முன்னர் வள்ளுவர் கூறிய கருத்துக்கள் இன்று புரட்சியும், புதுமையும் மிக்கதாகக் காண்பதென்பது வியக்கத்தக்கதாகும். வள்ளுவரது கருத்து அன்றும் இன்றும் ஒன்றே. ஆனல் அவற்றை எடுத்தாளும் முறையே நமக்குப் புதிதாகத் தோற்றுவிக்கின்றது. மனிதவாழ்வின் அடிப்படையான அறிவியக்கத்தை நல்ல முறையில் பயன்படுத்தி, வள்ளுவரது வாழ்க்கை நெறியின் வழியே அறத்தின்பால் சேர்ந்த அறிவு வாழ்க்கையை மக்கள் வாழப் பழகவேண்டும். அறிவோடு இயங்கினல் அறத்தோடு இயங்கமுடியும். ஒவ்வொன்றையும் ஆராய்ந்து சிந்தித்துச் செயலாற்றுவதே வள்ளுவர் நமக்கு எடுத்துக் காட்டிய வாழ்க்கை முறையாகும்'' என்று குறிப்பிட்டார்.

'முழுமையானது'

அடுத்துப் பேசிய செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ''வள்ளுவரது நூல் முழுமையானதும், பொதுமையானதுமாகும். அவர் கூறிய கருத்துக்கள், சங்க இலக்கியங்களிலே பரக்கக் காணலாம். பழந் தமிழர்களின் அரசியல், காதல், அறிவோடு சேர்ந்த அறம் செறிந்த வாழ்க்கை முதலியவற்றை நல்ல முறையில் எடுத்துக் காட்டியவர் வள்ளுவப் பெருந்தகை'' எனக் குறிப்பிட்டார்.

இறுதியில் கருத்தரங்கும், 'வள்ளுவர் இன்றிருந்தால்' என்பது பற்றி கவிஞர் கந்தவனம் தலைமையிலான கவியரங்கும், இசையரங்கும், கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

பாப்பாண்டவர் ஜெனிவா விஜயம்

ஜெனிவா, ஜூன் 10

ஜெனிவாவில் நடைபெறும் சர்வதேசத் தொழிலாளர் நல ஸ்தாபன மகாநாட்டில் உரைநிகழ்த்துவதற்காக பாப்பாண்டவர் இன்று வருகை தருகின்றார். அவர் வருகையை யொட்டி ஜெனிவாவில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

உடும்பிராய், செவ்.

சண்டிலிப்பாய் வடக்கு தமிழ்க் கலவன் பாடசாலை ஸ்தாபகரான திரு. கதிரவேலுச்சிருப்பரின் திருவுருவப் படத்தை பாடசாலை மண்டபத்தில் உடுவில் எம். பி. திரு. தர்மலிங்கம் திறந்து வைத்தார். ஸ்தாபகர் தின பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்ட திரு. தர்மலிங்கம் எம். பி பேசுகையில் சிருப்பர் கதிரவேலு, சண்டிலிப்பாய் இரட்டையர் புலவைரவர் கோவிலில் பல வருடமாக நடைபெற்று வந்த பலியிடுதலை நிறுத்தக் காரணமாகயிருந்தாரென்றும், அதற்கு பதிலுதவியாக இப்பாடசாலையை அமைத்தார் என்றும் கூறினர்.

தலைமையாசிரியர் திரு. மா. தம்பிராசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், கல்வி ஆலோசகர் திரு. இதிருநாவுக்கரசு, உடுவில் வட்டார கல்வி ஆலோசகர் திரு. ச. இராசா, திரு. செ. தில்லையம்பலம், ஆசிரியர் திரு. சி. விநாசித்தம்பி, ஆசிரியர் திரு. க மழவராயர் ஆகியோரும்பேசினர் திரு. பொ. செல்வரத்தினம் வரவேற்புரை நிகழ்த்தினர்.

— —

மட்டுநகருக்கு மந்திரி விஜயம்

மட்டக்களப்பு, செவ்வாய்

காணி நீர்ப்பாசன மந்திரி திரு. சி. பி, டி. சில்வா இம்மாதம் 21-ம் தேதி மட்டக்களப்பிற்கு விஜயம்செய்வார். மட்டக்களப்பில் நடைபெறும் கூட்டுறவுமகாநாட்டில கலந்துகொள்ளும் மந்திரி, இத்தொகுதியில் காணி நீர்ப்பாசனம் சம்பந்தமான சிலவேலைகளையும் பார்வையிடுவார்.

—

இடமாற்றம்

உடுப்பிட்டி, செவ்வாய்

வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரியில் ஒன்றரை வருடகாலமாக கனிஷ்ட அதிபராகக் கடமையாற்றிய திரு. வ. தர்மலிங்கம் இம்மாதம் முதல் வதிரி மெதடிஸ்த் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மைதானம் பி. ப. 6 மணி.

2. அரை இறுதிப்போட்டிகள் யாழ். மத்திய கல்லூரி மைதானம் பி. ப. 8 மணி.

பேச்சுப்போட்டி

கனிஷ்ட பிரிவு இறுதிப்போட்டி யாழ். வேம்படி மகளிர் கல்லூரி பி. ப. 3 மணி.

மத்தியபிரிவு இறுதிப்போட்டி யாழ். வேம்படி மகளிர் கல்லூரி பி. ப. 3 மணி.

சிரேஷ்ட பிரிவு இறுதிப்போட்டி யாழ். வேம்படி மகளிர் கல்லூரி பி. ப. 3 மணி.

13-6-69 வெள்ளிக்கிழமை

கரபந்தாட்டம்

1 அரை இறுதிப்போட்டிகள் (ஓவர்கேம்) யாழ். மத்திய கல்லூரி மைதானம் பி. ப. 4-30 மணி.

2 இறுதிப்போட்டி (ஓவர் கேம்) யாழ். மத்திய கல்லூரி பி. ப. 6-30 மணி.

3 அரை இறுதிப் போட்டிகள் (செற் அப் கேம்) யாழ். மத்திய கல்லூரி மைதானம் பி. ப. 7-30 மணி.

கூடைப்பந்தாட்டம்

1 இறுதிப்போட்டி யாழ். மத்தியகல்லூரி மைதானம் பி. ப. 7 மணி.

14-6-69 சனிக்கிழமை

மு ப. 5-30 மணி மரதன் ஓட்டம்.

மு. ப. 8-00 மணி அலங்கார வர்த்தக ஊர்வலம்.

பி. ப. 4-30 மணி உதைபந்தாட்டக் காட்சிப்போட்டி வெற்றிக்கோஷ்டியும் யாழ். உதைபந்தாட்டக் கழகக்கோஷ்டியும். யாழ். விளையாட்டு அரங்கு.

பி. ப. 4-30 மணி கரபந்தாட்டம் (செற் அப்) இறுதிப் போட்டி. யாழ். மத்தியகல்லூரி.

14-6-69 சனிக்கிழமை

கலை விழா

பி. ப. 6 மணி—10 குத்துவிளக்கு ஏற்றல்.

பி. ப. 6-15 மணி மங்கள இசை.
என். ஆர். சின்னராசா கோஷ்டியினர்

பி. ப. 7-15 மணி நடனம்

1. யாழ். வேம்படி மகளிர் கல்லூரி
2. யாழ். இந்துமகளிர் கல்லூரி
3. யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
4. இராமநாதன் மகளிர் கல்லூரி
5. மானிப்பாய் மகளிர் கல்லூரி

பி. ப. 8-30 மணி பரிசுவழங்கல் -
டாக்டர் V. T. பசுபதி அவர்கள்

சொற்பொழிவுகள்:

1. திரு. ரி. முருகேசம்பிள்ளை
யாழ். உதவி அரசாங்க அதிபர்
2. ஜனப் M. M. A. குத்தூஸ்,
அதிபர், ஒஸ்மானியாக்கல்லூரி
3. பரிசுபெற்ற மாணவர்கள் பேச்சு
4. நன்றி நவிலல் திரு. ச. அம்பிகைபாகன்
கூட்டுக் காரியதரிசி

பி. ப. 9-30 மணி நாடகம்

1. யாழ். இந்துமகளிர் கல்லூரி
— ருக்குவின் கலியாணம்
2. மகாஜனக்கல்லூரி 'தடுத்தாட்கொண்ட'

பி. ப. 10-30 மணி வாணவேடிக்கைப்போட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

உபயோகமற்ற விஷயங்களையெல்லாம் அறிந்து கொள்ளவேண்டுமென்று ஆசைப்படலாகாது. அறிவுக்கு மிஞ்சிய கல்வி ஆசையும் நமது துறவு விரதத்துக்கு மாறுபட்டது. — மகாத்மாகாந்தி

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் வைகாசி மாதம் 29-ந் திகதி (11-6-69)

தலைமன்னார் — இராமேச்வரம்

தலைமன்னாருக்கும் இராமேச்வரத்துக்கும் இடையே பிரயாணிகளை ஏற்றிச்செல்லும் முக்கியபொறுப்பை இந்திய அரசாங்கம் பலவருடகாலமாக ஏற்று நடத்தி வருகின்றது. விமான சேவை ஒருபுறமிருப்பினும் இருதேசபொதுமக்களின் உறவுகளையும்சுமார் 30 மைல் தூரத்துக்கு உட்பட்ட இந்தக் கப்பல்சேவையே பல விதங்களிலும் பிணைத்து வருகிறதென்றுகூறினால் அது தவறாது.

பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் நம் இரு நாடுகளும் இருந்த காலத்தில், வாரத்தில் 5 நாட்கள் இக்கப்பல்சேவை நடந்து வந்தது. ஆனால் இப்போதோ இரண்டே நாட்கள்தான் கப்பல் சென்று வருகின்றது. அதுவும் அதிக நஷ்டத்தில் நடக்கிறதாம். மழை காலத்தில் இரு மாதங்கள் இக் கப்பல்சேவை அடியோடு நிறுத்திவைக்கப்படுகின்றது. பிரிட்டிஷ் ஆட்சி நடந்த காலத்தில் சீராக நடந்துவந்த இச்சேவை, இப்போது சீர்குலைந்து வந்துள்ளது பெரிதும் வருந்தத்தக்கதாகும்.

இலங்கைமக்கள் இப்போதுள்ள சட்டப்படி ஜன்மத்தில் ஒருமுறைதான் இக்கப்பல் மூலம் இந்தியாவுக்கு யாத்திரைசெய்ய முடியும். பணக்காரர்கள் அதிக கட்டணம் செலுத்தி விமான மூலம் அண்டைநாட்டுக்குச் செல்கின்றனர். ஆனால் ஏழைகளுக்கும் நடுத்தர வகுப்பினருக்கும் இது முடியாது. இந்த அநியாயத்தடையை எந்த நோக்கத்துடன் போட்டிருப்பினும்சரி, இது இலங்கைப் பொதுமக்கள்பக்கத்திலுள்ள ஒரேஒரு அண்டைநாட்டுக்கும் யாத்திரைசெய்ய முடியாதபடி தடுப்பதாக இருக்கிறது. உலக மக்கள் அதிகமாக நம் இலங்கைக்கு யாத்திரையாக வரவேண்டுமென்று எதிர்பார்க்கும் நம் அரசாங்கம், இதே வாய்ப்பை தன்மக்களுக்கு மறுப்பது எப்படி நியாயமாகும்? இந்தியாவும் இலங்கையும் அரசியலில் வேறுபட்டிருப்பினும், கலாச்சாரம், சமயம் முதலிய பல்வேறு விஷ...

...போல் அனுமதிவழங்கவேண்டியது பலவிதங்களிலும் அவசியமாகும்.

சென்றமாதத்திலே இலங்கையிலே கப்பல் கூட்டுத்தாபனம், இந்தியாவின் ஒத்துழைப்புடன் ஆரம்பித்திருப்பதால் இராமேச்வரம், தூத்துக்குடி முதலிய இடங்களுக்குக் கப்பல் சேவையை. இலங்கை அரசாங்கமே இனி ஏன் நடத்தக்கூடாது இக் கப்பல் சேவையால் நஷ்டம் ஏற்படலாமென்று ஆட்சேபனை எழக்கூடும். ஆனால் பொதுமக்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்றான யாத்திரை உரிமையை, இலங்கை அரசாங்கம், தனது மக்களுக்கே ஏதோகாரணத்தால் மறுத்துவரும் அநியாயத்தைத்திருத்திக் கொள்வதாயின், ஏராளமான மக்கள் இவ்விரு நாடுகளிடையிலும் யாத்திரை செல்லவும், கப்பல்சேவை நஷ்டத்துக்குப் பதில் நல்லஇலாபத்தில் நடக்கவும் வழிபிறக்கக்கூடும் இவ்விஷயத்தைப்பற்றி புனராலோசனை செய்யும்படி, தமிழர் மட்டுமன்றி சிங்கள எம்.பி.மார்களும் வற்புறுத்த வேண்டிய சமயம் வந்துவிட்டது அண்டைநாடான இந்தியாவுக்கு யாத்திரை செய்ய வேண்டுமென்ற ஆர்வம் சிங்கள சமூகத்துக்கும் அதிகமிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதற்கிடையே இப்போது நடைபெறும் கப்பல் சேவையில், வாங்கும் கட்டண விகிதம், சற்றும் நியாயமானதல்ல. ஏற்கெனவே அடித்தளத்துக்கு 5 ரூபாயும் மேல் தளத்துக்கு 18ரூபாயும் வாங்கப்பட்ட கட்டணம், இப்போது முறையே ரூ 13க்கும் ரூ. 43க்கும் உயர்த்தப்பட்டுள்ளது. முப்பது மைல் தூரத்துக்கு இவ்வளவு அதிக கட்டணம் உலகில் எங்கும் வசூலிக்கப்படுகிறதா என்பது தெரியவில்லை. இதனால் கப்பலில் மேல்தளம் அநேகமாகக் காலியாகச் செல்லுகின்றது. இதைப்பற்றி உடன் கவனித்து, கட்டணத்தைக் குறைக்க வேண்டியது இந்...

நாவலர் விழா ஏற்பாடு

பத்தாயிரம் மக்கள் அமர்வதற்கு பிரமாண்டமான பந்தல்

நாவலர் சரித்திரத்தை கூறும் கலாச்சார வண்டிகள் பவனி

நாவலர் மகாநாட்டிற்காக மலையகம், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு மற்றும் வெளியிடங்களிலிருந்துவரும் ஆயிரக்கணக்கான பிரதிநிதிகளுக்கு தங்குமிட வசதியைச் செய்து கொடுப்பதற்காகத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவிட்டன யாழ். நகரிலுள்ள விஸ்தாரமான விடுதிவசதிகளைக்கொண்ட மூன்று பிரபல கல்லூரிகளுக்கு விழா நாட்களில் விடுமுறை அளித்து அவற்றில் விருந்தினரைத் தங்கச்செய்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மகாநாட்டிற்கு வரும் ஆயிரக்கணக்கான வெளியூர் பிரதிநிதிகளின் உணவு வசதிக்கான முன் ஏற்பாடுகளையும் சிலைதிறப்புப் பெருவிழா பற்றிய ஒழுங்குகளை கவனிப்பதற்கும் பொது இணைப்பாளர் திரு. ம. ஸ்ரீகாந்தாவும், செனட்டர் த. நீதிராசாவும நாளை யாழ்ப்பாணம் வருகின்றார்கள்.

மகாநாட்டிற்கு பஸ் சேவை

மகாநாட்டு நாட்களில் நள்ளிரவு வரை நிகழ்ச்சிகளிருப்பதால் யாழ். நகரின் சுற்றுப்புறங்களிலிருந்து வருபவர்களின் போக்குவரத்துவசதிக்காக மாநாட்டுப்பந்தலடியிலிருந்துயாழ்ப்பாணம் முற்றவெளிக்குப் பஸ் சேவையை நடாத்துவதற்கும், பருத்தித்துறை கொடிகாமம், காங்கேசன்துறை, காரைநகர் முதலிய இடங்களுக்கு நள்ளிரவுக்குப் பின்னும் பஸ்சேவையை ஏற்பாடுசெய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பேச்சுப் போட்டி

நாவலர் மகாநாட்டையொட்டி வடமாகாண பாடசாலை மாணவர்களுக்கிடையில் ஏற்பாடுகள் செய்யப்பட்ட பேச்சுப் போட்டிக்கு சுமார் 450 விண்ணப்பங்கள் கிடைத்துள்ள தென அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மன்றங்களுக்கு வேண்டுகோள்

ஜூன் 26-ம் திகதிதொடக்கம் 28-ம் திகதிவரை வடமாகாணத்தின் பிரதான பட்டினங்கள், கிராமங்கள ஊடாகச் சிலை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும்போது பொதுமக்களும் உள்ளூராட்சிமன்றங்களும் ஒத்துழைப்பும், ஆதரவும் அளிக்கவேண்டுமென்று நாவலர் சபை பொதுச்செயலாளர் திரு ம. ஸ்ரீகாந்தா, விழா இணைப்பு அலுவலாளர்கள் ஊர்வல அமைப்பாளர் ஆகியோர் உள்ளூராட்சிமன்றங்களுக்கு அனுப்பிவைத்துள்ள வேண்டுகோள் ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

கலாச்சார வண்டிகள்

ஜூன் 29-ம் திகதி காலை யாழ். முற்றவெளியில் ஆரம்பமாகும் நாவலர் சரித்திரத்தைக்கூறும் கலாச்சார வண்டிகளின் அமைப்பு வேலைகள் ஆரம்பமாகிவிட்டன. இந்த வண்டிகளின் நிர்மாணிப்பு வேலைகள் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, யாழ். ஸ்ரான்லி கல்லூரி, யாழ். பரமேஸ்வராக்கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி ஆகியவை செய்துவருகின்றன.

கொடிகள் விற்பனை

யாழ்ப்பாண பிரதேச விழாக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட நாவலர் திருவுருவப் பொறித்த கொடிகளின் விற்பனை இம்மாதம் 8-ம் தேதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இக் கொடிகள் விற்பனை ஜூலை மாதம் 2-ம் தேதிவரை நடைபெறும். இது சம்பந்தமாக நாவலர் சபை பொதுச் செயலாளர் திரு. ம. ஸ்ரீகாந்தா வெளியிட்டுள்ள ஒரு செய்தியில் நாவலர் நினைவாக பல பணிகளைச் செய்யவேண்டுமென்றும் அதற்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென்றும் கூறியுள்ளார்.

நாவலர் சிலைக்கு கொழும்பில் அமைக்கப்படும் வழியனுப்பு விழா, தேசமெங்...

...யப்பட்டுள்ளன. அரசாங்க தகவல்பிரிவின் திரைப்படப்பிரிவு முக்கிய சில நிகழ்ச்சிகளை செய்திப்படமாக்குமெனத் தெரியவருகிறது. நாவலர் விழாவின் சகல நிகழ்ச்சிகளையும், முழு நீளப்படமாக்குவதற்கான ஒழுங்குகளை தனியார் படத்துறை நிறுவனம் ஒன்று செய்துவருகிறது.

ஒருநாள் நீடிப்பு

மலையகம், மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம் மற்றும் இடங்களிலுள்ள அநேககலைஞர்கள் இவ்விழாவில் தமது நிகழ்ச்சிகளை அளிக்கமுன்வந்துள்ளதால் நான்காவதுநாள் விழா கலைவிழாவாக அமைக்கப்பட்டுள்ளதென, மாநாட்டுச் செயலாளர் திரு. என். சோமசுந்தரம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது அநேக நிகழ்ச்சிகளை சேர்த்துக் கொள்வதற்காகவும், அமோக ஆதரவுகாரணமாகவும், விழாவை மேலும், ஒரு நாள்வரை நீடிப்பதென மகாநாட்டுக்குழு முடிவு செய்திருக்கிறது. சிலைத்திறப்பு பெருவிழாவிற்கும், மகாநாட்டிற்குரிய நிகழ்ச்சிகள் வகுக்கப்பட்டுவிட்டன.

தமிழகத்திலிருந்து வரும் சொற்பொழிவாளர்களுடன் ஈழத்திலுள்ள தமிழறிஞர்களும் பேச்சாளர்களும், உரையாற்றுவார்கள். சகல பகுதிகளிலுமுள்ள சிறந்த கவிஞர்கள்பங்குபற்றும் கவியரங்கமும், மாணவர்களின் நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன.

பிரமாண்டமான பந்தல்

பத்தாயிரம் பார்வையாளர்களைக் கொள்ளக் கூடிய பிரமாண்டமான பந்தல் யாழ். திறந்தவெளியரங்கில் தயாராகிவருகிறதென்று இணைப்பு அலுவலாளர் திரு. கே. தனபாலசிங்கம், மாநாட்டு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதா...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நிபந்தனைகளுடன் அபிஷேகம்

யாழ்ப்பாணம், புதன்

திருநெல்வேலி கரியப்புலம் வைரவர் கோவில் அபிஷேகம் சம்பந்தமாக உதவி பொலிஸ் சுப்பிரீண்டன்ட் திரு அலீஸின் தலைமையில் மகாநாடு நடைபெற்றது. ஆனைக்கோட்டை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு.இராசா இம்மகாநாட்டை ஏற்பாடு செய்வதற்குப் பெரிதும் உதவினார். திருவாளர்கள் எஸ். சுப்பிரமணியம், எஸ். வன்னியசிங்கம் ஆகியோருக்கும், திரு. ஏ கே. சிவஞானத்துக்குமிடையில் நடைபெற்ற சமரசப் பேச்சுவார்த்தையின் முடிவில் 4 நிபந்தனையின்படி அபிஷேகத்தை நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

பந்தல், சிகரங்கள் சோடனைகள் யாவும் குறிப்பிட்ட எல்லைக்குள் மட்டுமே கட்டப்படவேண்டுமென்றும், ஒலிபெருக்கி இரவு 10 மணிக்குமேல் பாவிக்கக்கூடாதென்றும், நாட்டியங்கள், நாடகங்கள் ஆகியனஇடம் பெறக்கூடாது என்றும், போடப்பட்ட பந்தல் சிகரங்கள் மூன்று நாட்களுக்குள் அகற்றப்படவேண்டுமென்றும் மகாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(கா. நி.)

மேசன் பயிற்சிக்கு விண்ணப்பிக்கவும்

புங்குடுதீவு,செவ்.

புங்குடுதீவு மேற்கு 4-ம் வட்டாரத்தில் இயங்கும் அரசினர் மேசன் பயிற்சி நிலையத்தில் புதிய மாணவர்களை இம்மாதம் 15-ம் திகதிவரைசேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

6 மாதம்வரை அளிக்கப்படும் இப் பயிற்சிக்கு நாளொன்றுக்கு ரூபா 2 வீதம் அரசினர் நிதி உதவி கிடைக்கும்.

விண்ணம்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஐயாறன் எழுதுவது

முன்னர் பலமுறை தனுஷ்கோடி வழியாக இந்தியா சென்று திரும்பியிருக்கிறேன். ஆனால் ஒருமுறையாவது பக்கத்திலுள்ள உலகப் புகழ்பெற்ற இராமேஸ்வரம் சென்று தரிசித்ததில்லை. மண்டப முகாம், கஷ்டம்ஸ் பரிசோதனை முதலிய 'கண்டங்க'ளுக்குத் தப்பி சீக்கிரம் வரவேண்டுமென்ற அவசரத்தில் இராமேஸ்வரம் செல்ல நமக்கு அவகாசமேது?

சிலவருடங்களுக்கு முன் கடல்கொந்தளிப்பும் புயலும் கிளம்பி, தனுஷ்கோடியை அழித்துவிட்டதும் ஒருவிதத்தில் நல்லதுதான் என்று தோன்றுகிறது. இல்லாவிட்டால், இம்முறை இந்தியாவிலிருந்து திரும்புகையில் இராமேஸ்வரத்துக்குச் சென்று தரிசிக்கும் வாய்ப்பு எனக்கு எப்படிக் கிடைத்திருக்கமுடியும்?

0 0 0

திருச்சியிலிருந்து இராமேஸ்வரம் எக்ஸ்பிரஸில் புறப்பட்டு, சிலமணிநேரம் முன்கூட்டியே அந்தத்தலத்துக்கு வந்தேன். ஸ்டேஷனில் ஒரே கூட்டம். திருவிழா இல்லாதிருந்தும் இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் யாத்திரிகர்கள் ஏராளமாக வருகிறார்கள். பாரத நாட்டிலுள்ள பலபல விதமான மக்களையும் அங்கு பார்க்கலாம். மிக பக்தியுடன் வந்து பலரும் வழிபடுவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

இந்தியாவின் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்க அங்குஅரசாங்கம் ஏதேதோ பிரசார முயற்சிகளை எல்லாம் செய்கின்றது. ஆனால் அந்த ஸ்தலத்திலுள்ள பர்வதபர்த்தனி அம்பாள் சமேத இராமநாதேஸ்வரர் நாட்டின் பலபகுதிகளிலுள்ளவர்களையும் தம்பால் ஈர்ந்து, தேசிய ஒருமைப்பாட்டை வியக்கத்தக்க முறையில் எவ்விதம் செய்துவருகிறார் என்பதை நேரில் கண்டேன். 'செக்யூலா' என்று சொல்லி சமயத்தையும், கடவுளையும் பகிஷ்கரித்தால், மக்களிடையே எப்படி ஒற்றுமையும், தேசிய ஒருமைப்பாடும் ஏற்படமுடியும்?

0 0 0

உலகப்புகழ் பெற்ற இராமேஸ்வரம் கோவிலைச் சுற்றிப்பார்க்க பல நாட்கள் வேண்டும் கால் அசந்துவிடுகிறது. மொத்தம் அங்கு 22 தீர்த்தங்கள் உள்ளன. நாலாபுறமும் கடல் சூழ்ந்திருப்பினும், அந்தத் தீர்த்தங்களில் உப்புக் கரிப்பே இல்லை!

சுவாமி சந்நிதியில் ஒரு கம்பி போட்டிருக்கிறார்கள். சாதி வேறுபாடின்றி அதுவரை இந்துக்கள் யாரும் சென்று சரிசமமாகத் தரிசிக்கலாம். அதற்குமேல் குருக்கள்மார் மட்டுமேசெல்லுகிறார்கள்.

விபூதிப் பிரசாதம் பெற்றபோது குருக்களுக்காக ஏதோ சில்லறையைமுன்புறமுள்ள உண்டியல்பெட்டி மீது வைத்தேன். உடனே குருக்கள் அதை எடுத்து உண்டிப்பெட்டிக்குள் போட்டுவிட்டார். பின்னர் விசாரித்ததில், குருக்கள் தம் கையில் கொடுத்ததை மட்டுமே எடுத்துக்கொள்வாராம். கோயிலில் போறங்கு வைத்தகாசும் கோயிலையே சேர்ந்துவிடுமாம்.

அங்குள்ள சுவாமியின் கர்ப்பக்கிருகத்தையும், அம்மன் கோயிலையும் கட்டியது யார் தெரியுமா? 12-ம் நூற்றாண்டிலே இலங்கை அரசன் பராக்கிரமபாகுவே கட்டினான் என்பதற்குப் பல சான்றுகளுள்ளதாக, இராமேஸ்வர தலவரலாறு தெரிவிக்கிறது இதைப் படிக்க மிக வியப்பாகவும் மகிழ்ச்சியாகவு மிருந்தது. புகழ்பெற்றசிங்களபௌத்த மன்னரான பராக்கிரமபாகுவுக்குத்தான் அக்கோயிலில் எவ்வளவு பக்தி இருந்திருக்கவேண்டும்!

இந்த சமச்சாரம் இலங்கையிலுள்ள சிங்கள பௌத்த மக்களுக்குத் தெரியாது. தெரிந்தால் எவ்வளவு ஏராளமாக அங்கு அடிக்கடி சென்று வழிபடுவர். ரயில்மூலம் செல்லும் யாத்திரத்தடையையும் அவர்களே பெரும் கிளர்ச்சி செய்து வெற்றிகரமாக அதை நீக்கச் செய்யக்கூடுமல்லவா?

0 0

வாக்கினால் இன்புரைத்து வாழ்கிலார் தம்மை எல்லாம்
போக்கினால் புடைத்து அவர்கள் உயிர்தனை உண்டு மால்தான்
தேக்குநீர் செய்தகோயில் திரு இராமேச்சுரத்தை
நோக்கினால் வணங்குவார்கள் நோய்வினை நுணுகும் அன்றே.

— திருநாவுக்கரசர்

மக்கள் அதிகமாக நம் இலங்கைக்கு யாத்திரையாக வர வேண்டுமென்று எதிர்பார்க்கும் நம் அரசாங்கம், இதே வாய்ப்பை தன்மக்களுக்கு மறுப்பது எப்படி நியாயமாகும்? இந்தியாவும் இலங்கையும் அரசியலில் வேறுபட்டிருப்பினும், கலாச்சாரம், சமயம் முதலிய பல்வேறு விஷயங்களில் பண்டைதொட்டே நெருங்கிப் பிணைக்கப்பட்டுள்ளது. ஆகவே நமது ஒரேஒரு அண்டை நாடான இந்தியாவுக்கு யாத்திரை செல்லும் விஷயத்தில், இலங்கை மக்களுக்கு அரசாங்கம் விசேஷ சலுகைகளை அளிக்காவிடினும், இக்கப்பல்வழியாகத் தடையின்றிச்செல்லமுன் பட்டுள்ளது. முப்பது மைல் தூரத்துக்கு இவ்வளவு அதிக கட்டணம் உலகில் எங்கும் வசூலிக்கப்படுகிறதா என்பது தெரியவில்லை. இதனால் கப்பலில் மேல்தளம் அநேகமாகக் காலியாகச் செல்லுகின்றது. இதைப்பற்றி உடன் கவனித்து, கட்டணத்தைக் குறைக்க வேண்டியது இந்திய கப்பல் கூட்டுத்தாபனத்தின் அவசர கடமையாகும். அப்படிச் செய்வதால், இக்கப்பல் சேவை நஷ்டத்துக்கு பதில் இலாபத்தில் நடப்பதுடன், எளிய பொது மக்களுக்கும், யாத்திரைசெய்யும் அடிப்படை உரிமை கிடைக்கக் கூடியதாக இருக்கும்.

இராமநாதன் இசைக் கல்லூரி

இராமநாதன் இசைக் கல்லூரியில் பரீட்சை நடத்த தமிழகத்திலிருந்து வந்துள்ள சங்கீத கலாநிதி சித்தூர் சுப்பிரமணியபிள்ளையவர்கள், அக்கல்லூரி மாணவ மாணவிகளின் இசைத் தரம் மிக உயர்வாக இருப்பதாயும், ஆசிரியர்கள் மிக நன்றாகப் பாடம் சொல்லிக் கொடுத்துள்ளதாகவும் கூறியுள்ளது யாழ்ப்பாணத்துக்கே பெருமையும் மகிழ்ச்சியுமளிப்பதாகும். அண்ணாமலை பல்கலைக்கழகத்திலே இசைக் கல்லூரியின் அதிபராகவும், திருவையாறு அரசர் இசைக் கல்லூரி அதிபராகவும் இருந்துள்ள சித்தூரார் இக் கல்லூரிக்கு அளித்துள்ள பாராட்டுரையை வெறும் உபசார வார்த்தையாக நாம் கருதவில்லை.

முதல்தரமான வித்வான்களை ஆசிரியர்களாகக் கொண்டு சங்கீத மேதைகளை பரீட்சாதிகாரியாக வரவழைத்து, நடுக்கண்ட நீதியுடன் பரீட்சை நடத்திவரும் இக்கல்லூரியை அரசாங்கம் இனியும் கலக்கமின்றி அங்கீகரிக்க வேண்டியது எவ்வளவு அவசியமென்பதை விளக்கத் தேவையில்லை அரசாங்க அங்கீகாரம் இருந்தால்தான் அங்கு பட்டம் பெறுபவர்களுக்கு வேலை கிடைக்க முடியும். முன்போல் வெளிநாடு சென்று இசை பயில முடியாமலிருப்பதால் இக்கல்லூரியை அரசாங்கம் அங்கீகரித்து இதற்கு எல்லாவித உதவியும் ஆதரவும் அளிப்பது இங்கு பல கலைஞர்களின் கவலையைத் தீர்க்கவும், அவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கவும் முடிவதாக இருக்கும்.

"அன்பு செலுத்துவார் இன்மையால் மாணவ சமுதாயம் கெடுகிறது"

யாழ்ப்பாணம், புதன்

''சங்ககாலத்து அன்பு வாழ்க்கையில்மக்கள் தொடர்ந்து வாழ்ந்தால் நம்மிடையே இருக்கும் பண்பாடு இன்னும் மேலோங்கும் என்பதில் ஐயமில்லை. அன்பு செலுத்துவார் எவருமில்லாததால்தான் இன்றைய மாணவர் சமுதாயம் தீய வழிகளில் நாட்டம் கொண்டுள்ளது.''

பலாலி கனிஷ்டபல்கலைக் கழக அதிபர் திரு. என். கந்தசாமி இவ்வாறு தெரிவித்தார்.

பல்கலைக்கழகப்பத்திரிகைத் துறையினரால் நடாத்தப்பட்ட பட்டிமன்றத்தில கலந்து கொண்டு அதிபர் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:

தமிழ்இளைஞர்களும், மாணவசமுதாயமும் பழந் தமிழ்க் காப்பியங்களைக் கற்கும் வழக்கத்தைஇன்றுகைவிட்டு விட்டார்கள். இந்த நிலை நீங்கி சகலதும் கற்ற நல்ல பிரஜைகளாகத் திகழ வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

சிலப்பதிகாரத்தில் மாதவியா கண்ணகியா சிறந்தவள் என்ற தலைப்பில் நடைபெற்ற பட்டிமன்றத்தில் மாதவி சார்புக் குழுவுக்கு செல்வன் சக்தி ஜெகநாதனும் கண்ணகி சார்புக்குழுவுக்கு செல்வன் புறுதானும் தலைமை வகித்தார்கள்.

பேராசிரியர் திரு. பாக்கியநாதன், அதிபர் திரு. கந்தசாமி, விரிவுரையாளர் திரு. அ. இரத்தினம் ஆகியோர் நடுநிலைமை வகித்தனர்.

(கா. நி)

பேச்சுப் போட்டி

நாவலர் மகாநாட்டை ஒட்டி வடமாகாண பாடசாலை மாணவர்களுக்கிடையில் ஏற்பாடுகள் செய்யப்பட்ட பேச்சுப் போட்டிக்கு சுமார் 450 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதென அறிவிக்கப்பட்டிருக்கிறது. இப்பேச்சுப்போட்டியின் பூர்வாங்கத் தேர்வுகள் இம் மாதம் 6-ம் திகதி தொடக்கம் நடைபெற்றுவருகிறது. இறுதித் தேர்வு இம்மாதம் 22-ம் தேதி காலை யாழ். வண்ணை நாவலர் பாடசாலையில் நடைபெறவிருக்கிறது.

...ட்டுள்ள ஒரு செய்தியில் நாவலர் நினைவாக பல பணிகளைச் செய்யவேண்டுமென்றும் அதற்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென்றும் கூறியுள்ளார்.

நாவலர் சிலைக்கு கொழும்பில் அமைக்கப்படும் வழியனுப்பு விழா, தேசமெங்கும் நடைபெறும் நாவலர் விழாக்கள் நல்லூரில் நடைபெறும் சில திறப்புவிழா யாழ். முற்றவெளியில் நடைபெறும் மகாநாடு ஆகியவற்றின் நிகழ்ச்சிகள் அனைத்தையும் திரைப்படமாக்குவதற்கான ஏற்பாடுகள் செய்...

பிரமாண்டமான பந்தல் யாழ். திறந்தவெளியரங்கில் தயாராகிவருகிறதென்று இணைப்பு அலுவலாளர் திரு. கே. தனபாலசிங்கம், மாநாட்டு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: பந்தலின் சோடனை கண்ணைக்கவரக் கூடியதாக அமைக்கப்படும். பந்தல் முகப்பு பழந்தமிழர் பண்பாட்டை விளக்கும் வகையில் நிர்மாணிக்கப்படுகிறது

...ளப்படுவார்கள். 6 மாதம்வரை அளிக்கப்படும் இப் பயிற்சிக்கு நாளொன்றுக்கு ரூபா 2 வீதம் அரசினர் நிதி உதவி கிடைக்கும்.

விண்ணம்பங்கள் கோரப்பட்டுள்ளன.

புகார் பற்றிய விசாரணை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்திலுள்ள அரசாங்க கட்டடப் பயிற்சி நிலையப் போதனாசிரியருக்கு எதிராகசெய்யப்பட்டபுகார் சம்பந்தமான விசாரணையை கொழும்பு உதவி தொழில் கமிஷனர் திரு. வி எல். எஸ் விஜயசேகரா இம்மாதம்21ந் திகதியாழ்ப்பாணம்தொழில் கந்தோரில் நடத்தவிருக்கிறார்.

இக்கட்டடப்பயிற்சி நிலையத்தில் நடந்ததாக கருதப்படும் சில மோசடிகள் பற்றி அங்கு பயிற்சி பெற்று வரும் மாணவர்களும், பெற்றோர்களும் மேலிடத்திற்கு புகார் செய்திருந்ததைத் தொடர்ந்தே இவ்விசாரணை நடைபெறவிருக்கிறது.

உலகப்புகழ் பெற்ற இராமேஸ்வரம் கோவிலைச் சுற்றிப்பார்க்க பல நாட்கள் வேண்டும் கால் அசந்துவிடுகிறது. மொத்தம் அங்கு

...திரு இராமேச்சுரத்தை
நோக்கினால் வணங்குவார்கள்
நோய்வினை நுணுகும் அன்றே.
— திருநாவுக்கரசர்

கரவெட்டி - யாழ்ப்பாணம் டெலிபோன் சேவை பாதிப்பு

01 இலக்கத்திற்கு 28 கிடைக்கிறதாம்

உடுப்பிட்டி செவ்வாய்

கரவெட்டி- யாழ்ப்பாணம் தொலைபேசித் தொடர்பு கடந்த சில மாதங்களாக மந்தநிலையில் இயங்கி வருகின்றதென புகார் தெரிவிக்கப்படுகிறது.

ஒரேயொருலைன் மட்டுமே இங்கு இயங்கிவருவதாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது,

கரவெட்டித் தன்னியக்கத் தொலைபேசி இணைப்பு நிலையமும் இடையிடையேமணிக் கணக்காக இயங்காமலிருப்பதால் யாழ்ப்பாணத் தொடர்பு எடுப்பதில் சுமார் 5 மணித்தியாலம் கூடத் தாமதம் ஏற்படுகிறதாம். இதனால்நெல்லியடி கரவெட்டிப் பகுதியிலுள்ள சுமார் 35 டெலிபோன் பாவனையாளர்களும், உபதபாற் கந்தோர்களும் கஷ்டம் அனுபவிக்க வேண்டியுள்ளது.

யாழ்ப்பாணம் -01இலக்கத்திற்கு எடுக்கப்படும் தொடர்புகள்யாவும் 28இலக்க டெலிபோனைக் கொண்ட கரணவாய்உபதகாற்கந்தோருக்கே கிடைத்து வருவதாகவும் தினமும் சுமார்50அழைப்புக்கள் இப்படியாக மாறிக் கிடைப்பதால் அடிக்கடி சிரமம் ஏற்படுவதாகவும் கரணவாய் உபதபாற்கந்தோர் அதிபர் தெரிவித்தார்.

மலேஷியா, சிங்கப்பூரில் நடந்த கோரக் கொலைகள்!

[சிங்கப்பூரில் நீண்டகாலமாக வாழ்ந்துகொண்டிருக்கும் யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த அன்பர் ஒருவர் சிங்கப்பூர் மலேஷிய நிலைமையை இங்கு எழுதுகிறார்.]

அமைதியும் மகிழ்ச்சியும் தாண்டவமாடிய மலேஷியாவில் ஏற்பட்ட இனக் கலவரம் இப்போதும் சிங்கப்பூரில் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. மலேஷியாவின் தலைநகரிலிருந்து பலர் சிங்கப்பூருக்கு ஓடிவருகிறார்கள். இவர்களில் ஏராளமானோர் இளைஞர். அப்படி அங்கிருந்து வந்து இங்கு நுழைந்து கொள்பவர்கள் இங்கும் இனக்கலவரத்தைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கிறார்கள். வெட்டுக் குத்துகளும், சண்டைகளும் சிலஇடங்களில் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது.

சிங்கப்பூர் அரசாங்கம் இனக்கலவரத்தைத் தூண்டுபவர்கள்மீதும், குண்டர்கள் மீதும் கடும்நடவடிக்கை எடுத்து வருகிறது. குண்டர்களை நூற்றுக்கணக்கில் பிடித்து அடைத்து, அமைதியை நிலைநாட்ட சிங்கப்பூர் அரசாங்கம் முயன்றுகொண்டிருக்கிறது. கத்தி துவக்குப் போன்ற ஆயுதங்களை வைத்திருப்போரும்கைதுசெய்யப்படுகிறார்கள். இவர்களுக்கு 2 வருடச்சிறையும், 9 சவுக்கடியும் தண்டனையாக வழங்கப்படுமென அரசாங்கம் எச்சரித்துள்ளது. சிங்கப்பூர் பாதுகாப்புப்படைகள் இரவு நேரத்தில் வீதிகளிலும், முக்கிய இடங்களிலும் காவல்புரிகின்றன. மோட்டார் வாகனங்களையும் ஆட்களையும் சோதனைசெய்கிறார்கள்.

ஒவ்வொரு இரவிலும் இப்படியான சோதனையின் போது ஏராளமான சீனரும், மலாய்க்காரரும் கைதாகிறார்கள். இரவு நேரத்தில் வெளியில் மனித நடமாட்டமில்லை ஆனாலும் பகலில் வழமைபோல் எல்லாம் நடக்கிறது. ஊரடங்குச்சட்டம் அமுலாக்கப்படவில்லை. ஆயினும் எதிர்காலத்தில் சீனரும் மலேய்க்காரரும் ஒன்று கூடி வாழ்வார்களென்பது கேள்விக் குறியாக நிற்கிறது.

2 நர்ஸ் கொலை: டாக்டருக்கு பைத்தியம்

சிங்கப்பூரிலுள்ள ஆஸ்பத்திரியொன்றில் பணியாற்றும் டாக்டர் ஒருவர் இரு நர்ஸுகளுடன் காரில் சென்றுகொண்டிருந்த போது ஏற்பட்ட ஒரு கோரச் சம்பவம் நெஞ்சாலும் நினைக்க முடியாமல் இருக்கிறது. இந்த இரு நர்ஸுகளும் சீனர்கள். டாக்டர் இந்தியாவைச் சேர்ந்தவரெனக் கூறப்படுகிறது. காரை குண்டர்கள் திடீரென்று நிறுத்தி நர்ஸுகள் இருவரையும் வாளால் வெட்டிக் கொலைசெய்துவிட்டார்கள். பாவம்! இந்த அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ளமுடியாத டாக்டர், இப்போது சிங்கப்பூரிலுள்ள பைத்திய ஆஸ்பத்திரி ஒன்றில் சிகிச்சைபெற்றுக் கொண்டிருக்கிறார்.

சிங்கப்பூரிலுள்ள இலங்கையர்கள் பாதுகாப்பாகவே இருக்கிறார்கள். அவர்கள் இவ்விதமான கலவரங்களுக்குள்ளாகாமல் ஒதுங்கியே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

தாய், மகள், மனைவி பலி

மற்றொரு சீன டாக்டர் வெளியே சென்று சிகிச்சையளித்துவிட்டு வீடு திரும்பியபோது, வீட்டில் மனைவி, தாயார், மகள் மூவரும் மாண்டு கிடக்கும் கோரச் சம்பவத்தைக் கண்டார். இப்படியான பல அதிர்ச்சி தரும் கோரச்சம்பவங்கள் அங்குமிங்குமாக இப்போது மலேஷியாவில் நடந்து கொண்டிருக்கின்றன.

கொந்தளிப்பான ஒரு பரபரப்பான நிம்மதியற்ற சூழ்நிலையில் மலேஷிய மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

இன்னொரு சீன டாக்டர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருக்கும்போது காடையர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மலேஷியாவில் நடந்த சம்பவங்களை நினைத்துக் கூடப் பார்க்கப் பயமாக இருக்கிறது. மலேஸிய தேர்தல் முடிவுகள், சகோதரர்களாக இருந்துவந்த சீனர்களையும், மலேய்காரர்களையும் பூனையும் எலியுமாக சண்டைசெய்ய வைத்தது. கோலாலம்பூர் இரத்தக் களரியாகியது. மலேஷியாவில் இதுவரை மாண்டவர் தொகை 600 பேரை மிஞ்சிவிட்டது. கைதுசெய்யப்பட்டவர்கள் தொகை ஆறுயிரத்துக்குமேலாகி விட்டது.

சிங்கப்பூரினதும், மலேஷியாவினதும் துயரக்கதை இதுதான். பழைய நிலை எப்போது திரும்புமோ?

(உரும். நி)

'அரசாங்க சேவைமூலம்சிறப்பாக வாழலாம் என்றகாலம் போய்விட்டது

புலோலி, செவ்.

'இலங்கையின் எதிர்காலத்தில் தீர்த்துவைக்கமுடியாத பெரும் பிரச்னையாக வேலையில்லாத் திண்டாட்டம் வளர்ந்துவருகிறது. இவ்விதசூழ்நிலையில் நாட்டை நல்வழியில் செலுத்துவதற்கு வழிகாட்டியாக இருப்பது சன சமூக நிலையங்களாகும்.'

இவ்வாறு உபசபாநாயகரும் உடுப்பிட்டி எம். பி.யுமான திரு. மு சிவசிதம்பரம் வடதுன்னை ஸ்ரீ முருகன் சன சமூக நிலையத்தின் 19-வதுஆண்டு நிறைவுவிழாவில் தலைமைதாங்கிப் பேசுகையில் கூறினார்

திரு.சிவசிதம்பரம்மேலும் பேசுகையில் கூறியதாவது:

அரசாங்க உத்தியோகம் மூலம் வாழ்க்கை சிறப்பாக அமையும் என்று எண்ணுவது வீணானது அரசாங்க சேவைமூலம் சிறப்பாகவாழலாம் என்ற நிலை இன்று மாறிவிட்டது. இனிமேல் விவசாயம், தொழில்துறை மூலமே இங்கு வேலைவாய்ப்புக்களைப் பெறமுடியும். இங்கு வேலையில்லாப்பிரச்னை அதிகரிப்பதற்கு எல்லோரும் ஒருதுறையை நாடுவதும் ஒரு காரணம்.

பொருளாதாரத்துறை முன்னேற்றத்திலும் சன சமூக நிலையங்கள் தமது பங்கைச்செலுத்த முன்வர வேண்டும்.

புதியமுறையில் விவசாயத்தில் நவீன விஞ்ஞான முறையைக் கண்டுபிடித்தால் நாம் முன்னேறமுடியும். மற்ற நாடுகளைப்போல் சிறந்து விளங்க வேண்டுமென்றால் புதியமுறையில் நாம் கைத்தொழிலில் வளர்ச்சியடைய வேண்டும்.

குடும்பக் கட்டுப்பாடு

ஒன்றரை நிமிடத்திற்கு ஒரு குழந்தை இலங்கையில் பிறக்கிறது. இந்த வீதப்படி குழந்தைகள் பிறந்தால் நாட்டில் இருக்க நிலம் இல்லாமலும், பொருளாதாரப் பிரச்னையும் அதிகமாக வளர்ந்துகொண்டேபோகும். இந்த பிரச்னையை நாம் குறைக்க வேணுமென்றால் குடும்பக்கட்டுப்பாடு சிறந்ததாகும், அல்லாவிடில் பிறநாட்டவரை நம்பிவாழ வேண்டியநிலை ஏற்படும்.

சமீபகாலம்வரை உணவு உற்பத்தியைப்புறக்கணித்துவிட்டபடியால்தான் நாம் பிறநாட்டவரை நம்பிவாழ வேண்டியநிலை ஏற்பட்டது. நமது இனத்தினிடையே இருந்துவரும் பகைமையால்தான் நாம் மிக இக்கட்டான நிலையிலிருக்கிறோம்.

நயினாதீவு ....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இதனாலேயே மீன்பிடி வள்ளங்கள் சேவையில் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டாதென்றும் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இதுசம்பந்தமான படகுச் சொந்தக்காரரின் மகாநாடொன்றையும் காரியாதிகாரி திரு. விநாயகலிங்கம் கூட்டி ஆராய்ந்தார்.

பஸ்சேவை வழமைபோல் நடைபெறுமென்றும் தனிப்பட்ட வாகனங்கள் சேவை செய்வதற்கு எவ்வித தடையுமிருக்காது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969ம் ஆண்டு ஜூன் மாதம் 11ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org